காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 342 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 17, திங்கள் 03.11.2014

stay connected with: uthayan.print uthayanprint

*Uthayan - A lively National Tamil Daily*

பயன் பெறுவோம்

# தீர்வுக்கான முதல் நகர்வு தெற்கிலிருந்தே வரட்டும்

## பிக்குகளைக் களமிறங்க இந்து குருமார் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்.நவ.3
நாட்டில் சிங்கள தமிழ் மக்களுக்கிடையில் நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காத வரையில் சகோதரத்துவம் புரிந்துணர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை நிரந்தத் தீர்வு அமைவுறுவதற்கான நகர்வுகளை தென்னிலங்கை மதகுருமார்கள் முதலில் முன்னெடுக்க வேண்டும். இதுவே நல்லிணக்கத்தின் முதல் படியாக அமையும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்.

தீபாவளி பண்டிகையின் மகிழ்வை பகிரும் வகையில் தென்னிலங்கை சர்வமத பிரதிநிதிகள் குழு நேற்று யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அந்தக் குழுவினர் வட்டுக்கோட்டை மதருகுமார்கள் மற்றும் சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினர். அதன்போதே சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா.வாசுதேவக்குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"குருமார்கள் மூலமாக நாட்டில் மதங்கள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த முயற்சித்திருக்கும் அதேவேளை மதங்களுக்கிடையில் இறைவன் வழிபாட்டுமுறைகள், தத்துவங்கள் அதனை அனுஷ்டிப்போர் முதலியவற்றால் வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அனைத்து மதங்களையும் அன்பு ஒன்றிணைக்கின்றது. அன்பினைத்தான் அனைத்து மதங்களும் போதிக்கின்றன.

இதனை அறியாதவர்கள் தான் மதங்களுக்கிடையில் வேற்றுமைகளையும் பிரிவினைகளையும் தோற்றுவிக்கின்றார்கள். இதனால் நல்லிணக்கம் புரிந்துணர்வு

22 ஆம் பக்கம் பார்க்க

# சாட்சியங்கள் ஏற்கப்படும்

## ஐ.நா. விசாரணைக் குழு அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 3
இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் போர்க் குற்ற விசாரணைக்கான சாட்சியமளிப்புக் காலம் முடிவடைந்திருந்தாலும், அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சாட்சியங்கள் நிராகரிக்கப்படமாட்டாது என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ரூபர்ட் கொல்வில்லி தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்கான சாட்சியமளிப்பு கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன்

22 ஆம் பக்கம் பார்க்க

# 147 பேருக்கு கடந்த மாதம் டெங்கு

யாழ்ப்பாணம், நவ.3
யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் 147 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

# பாதிக்கப்பட்ட மலையக மக்களை நேரில் சந்தித்தது கூட்டமைப்பு



யாழ்ப்பாணம், நவ.3
கொஸ்லாந்தை, மீரியபெத்தை தோட்டத்தில் மண்சரிவுக்குள் உயிரோடு புதையுண்ட மக்களால் மீளாத் துயரில் ஆழ்ந்துள்ள உறவுகளை நேரில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறுதல் கூறி தமது ஆழ்ந்த இரங்கலை நேற்றுத் தெரிவித்துக்கொண்டனர்.

22 ஆம் பக்கம் பார்க்க

# தூக்குத் தண்டனையை குறைக்குமாறு போராட்டம்

## மீனவர்களின் உறவுகள் நேற்று மனுக் கையளித்தனர்



கொழும்புத்துறை, நவ.3
போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகளின் பின்னர் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட குருநகர் மற்றும் மண்டைதீவு மீனவர்களின் தண்டனையைக் குறைத்து கருணை காட்டுமாறு கோரி நேற்றுக் காலை யாழ்.ஆயர் இல்லத்தில் சவடிய குற்றவாளிகளின் மனைவி, பிள்ளைகள், உறவினர் ஆகியோர் யாழ். ஆயர் ஊடாக பாப்பரசருக்கு மனு ஒன்றைக் கையளித்தனர். அதே கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி அலு

22 ஆம் பக்கம் பார்க்க

# ரணிலை ஆதரிக்க தயாரில்லை

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.3
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க மாட்டோம் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டாலும் இதே நிலைப்பாடே முன்னெடுக்கப்படும் என்றும் தமிழ்க் கூட்டமைப்பு மேலும் குறிப்பிட்டது.

அதன் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும்போது, "பொது வேட்பாளராக ரணில் நிறுத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை எதிர்பார்க்க முடியாது"- என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு கருத்தையே மாதுளுவாவே சோபித தேரரும் தெரிவித்துள்ளார். இரண்டு தரப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாகவே இந்த விடயத்தை

22 ஆம் பக்கம் பார்க்க

# உயிரைப் பறித்த மட்டற்ற வேகம்

## மோ.சைக்கிள் விபத்தில் மாணவன் சாவு



யாழ்ப்பாணம், நவ.3
அதிக வேகத்தில் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில், அதைச் செலுத்

22 ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபை உறுப்பினர்களுக்கு வரியும் செலுத்தி வாகனங்கள்

## இலங்கையின் பிடிவாதத்தில் இந்தியா புதுத் திட்டம்

கொழும்பு, நவ.3
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்தியா வழங்கும் வாகனங்களுக்கு வரிச்சலுகை அளிக்க இலங்கை மறுத்துள்ளது. ஆயினும் இந்த மாத இறுதிக்குள் 7 வாகனங்களை வடக்குக்குக் கொண்டு வரத் தாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை கடந்த வருடம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியமைக்கப்பட்டது. இதில் தெரிவான 38 உறுப்பினர்களுக்கும் அன்பளிப்பாக வாகனங்களை வழங்க இந்திய அரசு முன்வந்தது. இந்த வாகனங்களுக்கான இறக்குமதி தீர்வையை நீக்குமாறு இலங்கை அரசை இந்திய அரசு கேட்டது.

ஆனால் இலங்கை அரசு அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை

22 ஆம் பக்கம் பார்க்க

# போரின் இறுதிக் காலம் குறித்தே பலரும் நேற்றுச் சாட்சியமளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3
இராணுவத்துக்கு எதிராக 21 முறைப்பாடுகளும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 17 முறைப்பாடுகளும் ஆணைக்குழுவின் நேற்றைய அமர்வில் பதிவு செய்யப்

22 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு, கிழக்குக்கு வெளியே எனில் பொலிஸிடமே முறையிட வேண்டும்

## காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழு இப்படிக் கூறுகின்றது

யாழ்ப்பாணம், நவ. 3
வடக்கு - கிழக்குக்கு வெளியே காணாமற் போனவர்கள் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆணைக்குழு

22 ஆம் பக்கம் பார்க்க

"எவரொருவர் மரங்களை நடுகின்றாரோ, அவர் தன்னை விட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"

- தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

# பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குக

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம் கோரிக்கை

பதுளை, நவ.3

பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உரிய முறையில் நிவாரணப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கொஸ்லந்த மீரியபெத்த சம்பவத்தை முன்னிட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்க அரசு அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மரவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொஸ்லந்த மீரியபெத்த பகுதியில் ஏற்பட்ட மண் சரிவைத் தொடர்ந்து அதனை அண்டிய பகுதிகளான ஸ்லபீ தோட்டம், பூணாகலை கீழ் பிரிவு, காகலை தோட்டம், உடவேரிய, கிறேக் உடப்புசலாவ கம்பா கீழ் பிரிவு, கேக்கிளிக் கீழ் பிரிவு பகுதியைச் சேர்ந்த பல தோட்டங்களில் மக்கள் மண்சரிவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்து பாடசாலை மற்றும் கோயில்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமக்களுக்கான நிவாரணப் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுக் கப்பட வேண்டும்என்றும்முகாம்களில் மலசலகூடவசதிகள் மற்றும்குடிநீர் வசதிகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதுடன், பூணாகலை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு காலை மற்றும் மாலை வேளைகளில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு வைத்தியர் ஒருவர் முகாமில்நிறுத்தப்படுதல்வேண்டும்என்றும்என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்

பெருந்தோட்ட மக்கள் நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கியதோடு உழைப்பையும்வழங்கிஉயிரையும்தியாகம் செய்துள்ளனர். இத்தனை அர்ப்பணிப்புக்களை செய்த மக்களின் உயிர் தியாகத்தினை கௌரவப்படுத்த அவர்களுக்கு துக்க தினம் அனுஷ்டிப்பது அவசியமாக காணப்படுகின்றது. ஆகையால் எதிர்வரும் 5 ஆம் திகதியை தேசிய துக்க தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கோரியுள்ளார். (ற-14)

# ஆபரண வடிவமைப்பு தொடர்பான கருத்தரங்கு

## பெருமளவு பயனாளிகள் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறைமன்றம், தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் இணைந்து யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர ஆபரண தொழில் துறையினருக்காக நடத்திய 'ஆபரண வடிவமைப்பில் நவீன நுட்பங்கள்' எனும் தலைப்பிலான முழு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 'நவீன ஆபரண வடிவமைப்பு நுட்பங்கள், அவற்றின் வடிவமைப்பு தொடர்பிலான புதிய பரிமாணங்கள், சர்வதேச தரநிர்ணயம் மற்றும் சந்தை வாய்ப்புக்கள்' முதலான விடயங்கள் தொடர்பாக மேற்படி நிகழ்வில் விரிவான கருத்துரைகள் வழங்கப்பட்டன.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையைச் சேர்ந்த வளவாளர்கள் மேற்படி பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு கைத்தொழில் தொடர்பிலான நடைமுறை சார்ந்த புதிய பல விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தனர். பயனாளிகளால் வினவப்பட்ட பல்வேறு சந்தேகங்கள் மற்றும் தெளிவின்மைகள் மற்றும் மேற்படி அதிகார சபையின் அனுமதிப்பத்திர நடைமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. (ற-14)

# ஐஸ்கிறீம் உற்பத்திகள் தொடர்பான பயிற்சிகள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டிலுள்ள ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களுக்கு சுகாதாரமான ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் முறை சம்பந்தமான பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், பயிற்சியின் நோக்கம்பற்றியும் அண்மையில் சுகாதாரக் குழுவால் மேற்கொண்ட நடவடிக்கை பற்றியும் விளக்கமளித்ததுடன் சோதனை நடவடிக்கையின்போது காணப்பட்ட சுகாதாரம் சம்பந்தமான குறைபாடுகள் பற்றியும் அவற்றை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்பது பற்றியும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நீர் மாசுபட்டிருப்பது மட்டுமல்ல, ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தும்போது காணப்படும் குறைபாடுகளால் ஐஸ்கிறீம் பக்ரீறியா தொற்றுக்குள்ளாவதுபற்றிவிளக்கமளிக்கப்பட்டது.

தனிநபர் சுகாதாரம் பேணப்படாமை, உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பன ஒரே இடத்தில் மேற்கொள்ளப்படல், குளிரூட்டிகளை அடிக்கடி துண்டித்தல், அவற்றைச் சரியான முறையில் துப்புரவு செய்யாமல் விட்டது போன்ற பல குறைபாடுகள் உற்பத்தி நிலையங்களில் காணப்பட்டன என்று பணிப்பாளர் இந்தப் பயிற்சியின் போது சுட்டிக்காட்டினார். இப்பயிற்சியின்போது கொழும்பு சுகாதாரத்திணைக்களத்திலிருந்துவருகை தந்த வளவாளர்களால் நீரைச் சரியான முறையில் தூய்மையாக்குவது, தனிநபர் சுகாதாரம் பேணும் முறை, கை கழுவும் முறை, உணவுச் சட்டத்தின் அடிப்படை விடயங்கள் பற்றி வீடியோ காட்சிகளுடன் விளக்கமளிக்கபட்டது.

ஊழியர்களுக்கு சுகாதார முறைகள் பற்றிக் கற்பிப்பதுடன் அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்கின்றார்களா என்பது பற்றிக் கண்காணிப்பது தொழில் வழங்குநரின் கடமை என்று இந்தப் பயிற்சிநெறியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து ஐஸ்கிறீம் உற்பத்தி நிலைய உரிமையாளர்களுக்கு அவர்களிடம் இனங்காணப்பட்ட சுகாதாரக் குறைபாடுகளைத் தனித் தனியாக விளக்கமளித்து ஆகக் குறைந்த தேவையைப் பூர்த்திசெய்ய ஆலோசனை வழங்கப்பட்டதுடன் கட்டுமானப் பணிகளில் திருத்தம் செய்வதற்கு கால அவகாசம் வழங் கப்பட்டது. இதில் ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தியாளர் கள் 65 பேர் கலந்து கொண்டனர். (ற-155)





கடந்த வாரம் நிலச் சரிவால் பாதிக்கப்பட்ட பதுளை, மீரியபெத்த பகுதிக்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினர். அங்கு நடைபெறும் மீட்புப் பணிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.











பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 17 திங்கள் (03.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 342

# மீரியபெத்தப் பகுதியில் நேற்றும் ஒரு சடலம் மீட்பு

## மலையகத்தில் தொடர்கின்றது சோகம்

கொழும்பு, நவம்பர் 3

**மண்சரிவினால் புதையுண்டுள்ள பதுளை, கொஸ்லந்த - மீரியபெத்த பகுதியிலிருந்து நேற்றும் ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளது.**

**மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்களில் இதுவரையில் 6 சடலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள் ளன என்று மீட்புப் பணியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.**

இதேவேளை, நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப் பட்ட பெண்ணின் சடலத்தை அடையாளம் காண் பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

கடந்த 29 ஆம் திகதி காலை 7.15 மணியளவில் மீரியபெத்த பகுதியில் ஏற்பட்ட பாரிய மண் சரிவில் சிக்குண்டுள்ளவர்களை மீட்கும் பணிகள் மந்தமாகவே இடம்பெற்று வருகின்றன. இதற்கு அதிகாரிகள் கால நிலையைக் காரணம் காட்டு கின்றனர்.

தற்போது இடம்பெறுவது போல் ஆமை வேகத்தில் மீட்புப் பணி தொடருமானால், புதை யுண்டவர்களை தோண்டி எடுப்பதற்கு பல வாரங்கள் செல்லும் என்று அதிருப்தியுடன் பிரதேச வாசிகள் கவலை வெளி யிடுகின்றனர்.

அதேவேளை, காணாமற் போனோர் தொடர்பான தக வல்களும் உரிய வகையில் வெளியிடப்படவில்லை. நாளாந் தம் குறைந்து செல் லும் பெறுமானத்திலேயே தகவல்கள் வெளியிடப்படுகின் றன. இதனால், உண்மைகள் இருட்ட டிப்பு செய்யப்படுகின்ற னவா என்று சமூக ஆர் வலர்கள் கேள்வி எழுப்புகின்ற னர். (ற-சி)

## தேர்தலில் போட்டியிட ஷிராணிக்கு அழைப்பு

கொழும்பு, நவ.3

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுமாறு மாதுளுவாவே சோபித தேரரின் நீதியான சமூகத்துக்கான இயக்கம் கேட் டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வேறுசில கட்சி களும் அவரிடம் இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது தொடர்பாகவே அவ ரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக் கிரமசிங்க ஆகியோருடன், மூன்றாவது வேட்பாளராக அவரைப் போட்டியிடுமாறே கட்சிகள் கோரியுள்ளன. இதே வேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மாதுளுவாவே சோபித தேரருக் கும் இடையில் இணக்கப் பாட்டை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் முயன்று வருகின்றன என வும் தெரிய வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதற்கு தேரர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துவருகிறார். இந்த நிலையில் பொருத்தமான பொதுவேட்பாளர் ஒருவரை இனங்கண்டால், தான் தேர்த லில் போட்டியிடமாட்டார் என்று ரணில் விக்கிரமசிங்க, தனக்கு நெருக்கமான வட்டாரங் களிடம் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது. (ற)

## காங்கேசன் துறைக்கான ரயில் பாதை ஆண்டு இறுதிக்குள் முடிய வேண்டும்

### ரயில்வே திணைக்களத்துக்கு அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

காங்கேசன்துறைவரைக்கு மான ரயில் பாதைக்குரிய சகல பணிகளையும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் முடித்து விட வேண்டும் என்று அரசு ரயில்வே திணைக்களத்தைக் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரைக்கு மான ரயில்சேவைகள் கடந்த 13 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றன. தொடர்ந்து காங் கேசன்துறை வரைக்குமான சேவைகளை நடத்தும் பொருட்டு ரயில்பாதைகளை யும் மற்றும் ரயில் நிலையங் களையும் துரிதமாக அமைக் கும் பணிகள் இந்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ரயில்வே திணைக்களத் தின் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"கோண்டாவில் வரைக்கு மான ரயில் பாதைகள் சரியான முறை யில் அமைக்கப்பட்டு பொருள்களுடன் ரயில் கோண் டாவில் வரைக்கும் சென்று வருகின்றது. தொடர்ந்து சுன் னாகம் வரைக்கும் ரயில் பாதைக்கான தண்டவாளங் கள் அமைக்கப் பட்டுவருகின் றன. அத்துடன் காங்கேசன் துறை வரையான ரயில் நிலை யங்களின் புனர்நிர்மாணப் பணிகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இந்த ஆண்டு இறுதிக்குள் காங்கேசன்துறை வரைக்கு மான ரயில் சேவையை ஆரம் பிக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு ரயில்வே

(21ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இலக்கிய விழாவின் 2 ஆம் நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், நவ.3

வடமாகாண தமிழ் இலக் கிய விழாவின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் நேற்று காலை 9 மணியளவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் எழுத்தாளர் அகளங்கன் தலை மையில் இடம்பெற்றது.

தமிழ் தாய் வாழ்த்தை புதுக்குளம் மகா வித்தியாலய மாணவிகள் வழங்கினர் தொடர்ந்து ஆய்வரங்க நிகழ்வு கள் ஆரம்பமாகின. ஆய்வ ரங்கின் வரவேற்புரையை நல்லூர் கலாசார உத்தியோ கத்தர் கு.ரஜனி வழங்கினார். ஆய்வரங்க சிறப்புரையை யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கௌரிகாந் தன் வழங்கினார். தொடர்ந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## தொழில் கூட்டுறவு மாநாட்டில் ஆறு இலங்கையர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவ.3

சீனாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐரோப் பிய ஆசிய தொழில் கூட்டுறவு சம்பந்தமான மாநாட்டில் தொழி லாளர்களின் தொழில் சம்பந்த மான நடைமுறை சட்டங்கள் போன்றவை விரிவாக ஆரா யப்படவுள்ளன. இந்த மாநாட் டில் இலங்கையில் இருந்தும் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த ஆறு பேர் பங்குபற்ற வுள்ளனர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம் பமாகும் இந்த மாநாடு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெற வுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வட மாகாண பிரதி தொழில் ஆணையாளர் கேகணகேஸ்வரன் இது தொடர்

(21ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் விஜயம் குறித்து ஆராய வத்திக்கான் குழுவினர் கொழும்பில்

கொழும்பு, நவ.3

பரிசுத்த பாப்பரசரின் பய ணம் திட்டமிட்டபடி நடை பெற வேண்டுமா? அதற்கு ஏது வான சூழ்நிலை இலங்கையில் காணப்படுகின்றதா? உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற் காக வத்திக்கானை சேர்ந்த விசேட குழுவொன்று சனிக் கிழமை இலங்கைக்கு பய ணம் மேற்கொண்டுள்ளது.

இக்குழுவினர் வெளிவிவ் கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்து உரையாடவுள்ள துடன் பரிசுத்த பாப்பரசரின் பயணத்துக்கான ஏற்பாடுகள் குறித்து கேட்டறியவுள்ளனர்.

இக்குழுவினர் கத்தோ லிக்க திருச்சபையினரையும் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னனி தலை வர்களுக்கு இந்த குழுவின் பயணம் குறித்து கத்தோலிக்க திருச்சபை தெளிவுபடுத்தியுள் ளது.

இது இவ்வாறிருக்க ஜனாதி

(21ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த மக்களுக்கு ஆதீனத்தில் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 3

பதுளை மண்சரிவு இடரில் உயிரிழந்த மக்களுக்கு நேற்று நல்லை ஆதீனத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நல்லை ஆதீ னம், சின்மயா மிஷன், ராம கிருஸ்ணமிஷன் மற்றும் சத்திய சாயி சேவா நிலையம் ஆகியன இணைந்து இந்த அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த அஞ் சலி நிகழ்வில் திருமுறைப் பாடல்கள், பஜனை வழிபாடு கள், நாம சங்கீர்த்தனம் மற்றும் இசை அஞ்சலி போன்றவற் றின் மூலம் மண்சரிவு இடரில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக் கப்பட்டது. (ற-10)

## தேர்தல் திகதி இன்னும் முடிவாகவில்லையாம்

### சுசில் பிரேம ஜயந்த கூறுகின்றார்

கொழும்பு, நவ.3

ஜனவரி மாதம் நடத்தப் படும் என்று அறிவிக்கப்பட் டுள்ள ஜனாதிபதித் தேர்தல் திகதி இன்னமும் முடிவுசெய் யப்படவில்லை என்று தெரி வித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜெயந்த. ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடை பெறும். தேர்தலுக்குரிய திகதி யும் தமக்குத் தெரியும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல கூறியிருக் கும் நிலையிலேயே சுசில் பிரேம ஜெயந்த மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பில் எழுப்பப்பட்ட கேள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறியதொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி குறித்த செயலமர்வு

### எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இலங்கை வர்த்தக மன்றத்தின் அனுசரணையு டன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரத் துறையின ரின் நலன்கருதி தொழில் அபி விருத்தி தொடர்பான செயல மர்வு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களின் தேவையறிந்து, பொருத்த மான வழிகாட்டல்களுடன் கூடிய செயலமர்வாகவும், தொழில் முயற்சியை நிலைத்து நிற்கக்கூடிய வகையில் எவ் வாறு முகாமை செய்வது? என்பது தொடர்பாகவும் மிகச் சிறந்த வளவாளர்களால் கருத் துரைகள் வழங்கப்படவுள் ளன.

அத்துடன் தொழிநுட்ப

(22ஆம் பக்கம் பார்க்க)

26 ஆவது பிறந்த தினமும்
7 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



**விஜயகுமார் விஜயதாஸ் (வினோத்)**

தோற்றம் 21.11.1988 — மறைவு 03.11.2007

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
என்றும் நினைவில்
அக்கா அனு குடும்பத்தினர்.
அனுபியூட்டிபார்லர்,
GPS றோட், கல்வியங்காடு.

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 01 . 1951 — மறைவு 06 . 11 . 2011

**நன்னியர் கணேஷ்**

திதி : வளர்பிறை ஏகாதசி

குடும்பத்தின் ஜீவனாகி,
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ,
கொண்டும்மைச் சென்றதுவோ.
மூன்றாண்டுகள் சென்றாலும்,
மறையாது உம் நினைவுகள்
மீண்டும் நான் காண்பதற்கு,
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து,
கரைக்கின்றோம் எம்வாழ்வை
மண்மீது உமை என்னும்,
மனதோடு வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊரெழு கிழக்கு, ஊரெழு. குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர்
செல்லத்துரை தேவரஞ்சன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
**பத்மாவதி செல்லத்துரை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி மாவட்ட ஆணையாளர்கள் சாரணத் தலைவர்கள், சாரணர்கள்.
யாழ்ப்பாணம்.

(53763)(7.6)

---

## 2 ஆம் ஆண்டு நீங்கா நினைவஞ்சலி



மலர்வு 30 . 08 . 1926 — உதிர்வு 03 . 11 . 2012

**அல்பிரெட் இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை**

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்"

தினமும் எம் இருதயத்தின் நினைவலைகளில் நேசித்து நினைவு கூரப்படுகின்றீர்கள்

"ஜோய்லின்"
உடுவில் வீதி, மானிப்பாய்.
என்றும் மறவாத குடும்பத்தினர்.

(53696)(12.3.6)

---

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் விஸ்வப் பிரம்மதாசன்
**துரையப்பா கோபாலகிருஸ்ணன்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்-
கனுக்கேணி கிழக்கு, முள்ளியவளை)

தோற்றம் 28.07.1941 — மறைவு 23.10.2007

திதி: 03.11.2014

ஆண்டுகள் ஏழு ஆனாலும் நாம் உங்கள் பிரிவில் இருந்து மீண்டெழவில்லை அப்பா ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவுடன் வாழ்ந்திடுவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம் தினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோ. கோகுலன் குடும்பத்தினர்
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## 15 ஆம் ஆண்டு நினைவு



திருமதி செல்வரத்தினம் நடராஜா

மலர்வு 13.07.1929 — உதிர்வு 22.10.1999

திதி: 03.11.2014

ஆண்டுகள் பதினைந்து ஆகிவிட்டதம்மா!
எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை
ஆண்டவன் திருவடியை அடைந்து
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"செல்வவாசா"
கண்டுவில் ஒழுங்கை.
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவில்.
கணவர், பிள்ளைகள்.

(A/17531)(4.3.6)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 - 10 - 1934 — மறைவு 22 - 10 - 2007

அமரர்
**சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)**
(தென்மராட்சி மேற்கு,கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும்,
யாழ்.விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவரும்)
திதி: 03.11.2014

அகத்தில் தூய்மை கொண்டு இறைவனை வசமாக்கி
அறத்தில் தூய்மை கொண்டு அனைவரையும்
முன்னேற்றப் பாதையில்
முயற்சியுடன் வாழ வைத்து உம் உழைப்பால்
முன்னுதாரணமாய்த் திகழ்ந்தீர்கள்....
இலட்சியப் பாதையில் வெற்றியோடு வாழ்ந்தீர்கள்
காலதேவன் உங்களை அழைத்துச் சென்று
ஆண்டுகள் ஏழு ஆனாலும் உம் நினைவுகள்
என்றும் ஓயாதையா!

கைதடி தெற்கு, கைதடி
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

திருமதி **பத்மாவதி செல்லத்துரை**



யாழ். அச்சுவேலி பத்தைமேனியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி செல்லத்துரை நேற்று முன்தினம் (01.11.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு -செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை (கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வவிநாயகம் மற்றும் சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரநாதன், திருநாமசுந்தரம், பரமேஸ்வரி மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோறஞ்சினி, தேவறஞ்சன் (STEPS Programme, கல்வி அமைச்சு, யாழ்.மாவட்ட சாரணர் ஆணையாளர்), ஜெயபாலன்(Omex Hotal) சிவபாலன் (முன்னாள் மின் இணைப்பாளர், யூரோவில்), இந்திரபாலன் (ஜேர்மனி), குணபாலன் (குணா போட்டோ) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலேஸ்வரன்(T.S-), தனலட்சுமி, பத்மாவதி (கௌரி), சாரதலீலா(Bank of Ceylon-Manipay), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன்(ராஜா தியேட்டர்), தர்மினி(கனடா), கர்ணாதீபன், உமைப் பிரியா, தாரணி(A/L மாணவி கோண்டாவில், இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), பவித்திரா(HNDE மாணவி, உயர் தொழிநுட்பக் கல்லூரி), கஜாணன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்), பிரிந்தாபன்(மலேசியா), ஸ்ரீலவன், தனஜெயன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), தர்சன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்), இளங்கீரன்(A/L மாணவன் கொக்குவில் இந்துக் கல்லூரி), சாம்பவி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி, மாணவி), அனுரன், மயூரன் (கனடா), கோகுலன் (D.S அலுவலகம், பூநகரி) ஆகியோரின் பேர்த்தியும், நிதுஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

210/1, சேர் பொன். இராமநாதன் றோட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(53764)(3.6.4)

# ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையால் வெகுமதிகள்

யாழ்ப்பாணம்.நவ.3
இந்த வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகள் ஏழாயிரம் பேருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கை-பொறுப்பு நிதிச்சபையால் வழங்கப்படவுள்ளது.

குறித்த வெகுமதிகளைப் பெறத் தகுதியுடையவர்கள் தலைமை அலுவலகம், புலமைப்பரிசில்கள் பரீட்சைப் பிரிவு இல. 92 கிருள வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05. என்ற முகவரிக்கு தமது நிரந்தர முகவரியைக் குறிப்பிட்டு ஒரு தபால் உறையை அனுப்பி வைக்கலாம். அல்லது இல.70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் செல்வதன் மூலமும் தமது விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய மாவட்டங்களில் வசிப்போர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் தத்தமது பிரதேச கிளை அலுவலகங்களுக்கு நேரடியாகச் செல்வதன் மூலமும் விண்ணப்பங்களைப் பெற முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் புலமைப்பரிசில் அலுவலகர், புலமைப்பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை, இல.92 கிருள வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். (வ-ரி)

## தெல்லிப்பழை மருத்துவமனை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள்



அளவெட்டி. நவ.3
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகம் மற்றும் சுற்றாடல் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கட்டாக்காலி நாய்கள் கூட்டமாக மருத்துவமனைக்கு செல்லும் வீதியில் நிற்பதால் மருத்துவமனைக்குச் செல்வோரும் ஏனைய பாத சாரிகள் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் மருத்துவமனை வேலி சுற்றுமதில் இல்லாததால் நாய்கள் மழை நேரங்களில் தங்குவதற்கு மருத்துவமனைக் கட்டடங்களை நாடுவதுடன் அசிங்கப்படுத்தியும் விடுகின்றன. சிகிச்சைக் காக வருவோர் இதன் காரணமாக நாய்களைக் கண்டவுடன் பயந்தவாறு ஓரமாக ஒதுங்கிச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

நாய்களும் அவற்றின் குட்டிகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளதால் வீதிகளில் வாகனங்களில் மோதுண்டு இறந்தும் வீதியில் காணப்படுகிறது. நாய்க்கு வாழ்வளிப்பவர்கள் இதனைச் சிந்திப்பார்களா? என்று வினாவியபடி செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அண்மையில் தெல்லிப்பழைச் சந்தியில் நால்வரைக் கடித்த நாயின் தலையை சுகாதார பரிசோதகர்களால் கொழும்புக்கு அனுப்பியதாக பத்திரிகையில் செய்தி வந்தமை யாவரும் அறிந்த உண்மை. (வ-36)

## சண்டிலிப்பாயில் 300 வீடுகள் டெங்குப் பரிசோதனைக்கு

வலி.தென்மேற்கு. நவ.3
பருவ மழையைத் தொடர்ந்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பிரதி சனிக்கிழமை தோறும் கிராம அலுவலர் ரீதியாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் தரிசிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக முதன் முதலாக சாவற்கட்டு கிராமத்திலுள்ள 300வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் பரிசோதிக்கப்பட்டபோது 11 வீடுகளில் குடம்பிகளும் 35வீடுகளில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய தடயப்பொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

கடந்த வாரம் கொழும்பிலிருந்து வந்த பூச்சியியல் ஆய்வுக் குழு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஆனைக்கோட்டை, நவாலி, சாவற்கட்டு ஆகிய கிராமங்களில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

பூச்சியியல் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வந்துள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரதி சனிக்கிழமை தோறும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக வீட்டுத்தரிசிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார். (வ-115)

## பாம்பால் இருவர் கடியுண்டனர்

தென்மராட்சி, நவ.3
காணி துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தர் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

பாம்பினால் கடியுண்ட இதே இடத்தைச் சேர்ந்த முருகேசு குணசிங்கம் (வயது-63) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை காணிக்கு விறகு எடுக்கச் சென்ற யுவதியும் பாம்பால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் வடக்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த யோகநாதன் மதனாம்பாள் (வயது-19) என்னும் யுவதி பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## மானிய உரம் வழங்கல்

தென்மராட்சி, நவ.3
தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம், மூன்றாம் கட்ட மானிய உர வகைகள் இன்று கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படும்.

சங்க அங்கத்தவர்களை தவறாது பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் எஸ்.சதானந்தன் அறிவித்துள்ளார். (வ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மட்டுவில் மத்தி கலைவாணி முன்பள்ளியில் தனது அர்ப்பணிப்பான ஆசிரியப்பணியினை ஆற்றிவரும்

**திருமதி கௌசிகன் சுகந்தினி**

12.09.2014 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டமையினையிட்டும் 29.09.2014 அன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டம் (B.A) பெற்றமையினையிட்டும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் வாழ்வில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.




பாடசாலைச் சமூகம்
கலைவாணி முன்பள்ளி
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

## 10 ஆவது பிறந்தநின வாழ்த்தும் பாராட்டுதலும் நன்றிகளும்

Happy Birthday



Congratulations

**செல்வி இ.அஸ்வியா**

பருத்தித்துறை நிலாவில்
அல்வாய் வடமேற்கு
அல்வாயைச் சேர்ந்த
செல்வி **அஸ்வியா**
இன்று (03.11.2014)
திங்கட்கிழமை
தனது பத்தாவது பிறந்தநாளை
வெகுவிமரிசையாகத்
தனது இல்லத்தில்
கொண்டாடுகின்றார்.

செல்வி இ.அஸ்வியாவை இந்நன்னாளில் வாழ்த்துவதோடு யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான இவர் 2014ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் **176** புள்ளிகளைப் பெற்றமையையிட்டு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு மேன்மேலும் கல்வியில் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

செல்வி இ.அஸ்வியாவின் முன்னேற்றத்துக்காக உழைத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
இராகவன்-ஜீவினி (பெற்றோர்)
மாமாமார், அத்தைமார், அன்ரிமார்,
சித்தப்பா, அம்மம்மா-அம்மப்பா,
அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பாமார்,
பெரியம்மாமார் மற்றும் உறவினர்கள்.

Best Wishes

(51990) (7.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




முல்லைத்தீவு, சுதந்திரபுரம், உடையார்கட்டைச் சேர்ந்தவரும் மு/உடையார்கட்டு மகா வித்தியாலய பிரதி அதிபருமான

**சதாசிவம் சிவகுமார்**

அவர்கள் 24.09.2014ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best wishes

வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரி சங்கம் மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்

(51987)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




'சிவமணிவாசம்'
நாவலடி, உடுப்பிட்டியைச்
சேர்ந்த
அருந்தவச்செல்வம்
லதாமணி தம்பதியரின்
செல்வப்புதல்வன்

**அ.அபிராம்**

யா/உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன்
கல்லூரியில் கல்வி கற்று
2014 தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் 172
புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளார். இவர்
கல்வியில் மேன்மேலும்
சிறந்து பல சாதனைகள்
படைக்க வாழ்த்துகின்றோம்.

(51988)(12.3.6)

வாழ்த்துவோர்:
பெரியப்பாமார், பெரியம்மாமார், ஆசையப்பா, ஆசையம்மா,
மம், அண்ணாமார், அக்காமார்,
தம்பி, மாமாமார், மாமிமார், மைத்துனன்மார், மைத்துனிமார்.

## பாராட்டுகின்றோம்



லோகராஜ்-தர்சனா
புள்ளி - 172 நிலை 33



செந்தில்நாதன்-கோபிராஜ்
புள்ளி - 158 நிலை 152

Congratulations

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| ஆ.காருக்ஷா | - 153 | பா.விவேகன் | - 124 |
| கோ.சகானா | - 150 | க.விதுசாயினி | - 121 |
| வி.நன்னிலா | - 149 | த.கஜீபன் | - 120 |
| ப.பவிதா | - 148 | ப.நிதுசன் | - 118 |
| சி.ருசாந்தன் | - 143 | ஜெ.புகழினியன் | - 112 |
| ச.கவிநயா | - 142 | கு.கேனுஜா | - 109 |
| த.தமிழ்நிலா | - 140 | ர.லதுர்சன் | - 104 |
| ச.வேனுஜா | - 137 | பா.ஸபீசன் | - 103 |
| அ.கீர்த்தனா | - 135 | பு.கவில்சியானி | - 103 |
| சுஜாமழினியன் | - 127 | | |

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்களையும் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி ம.சதானந்தன் அவர்களையும் மேலதிக வகுப்புக்களை எடுத்த ஏனைய ஆசிரியர்களையும் ஊக்கமளித்த பெற்றோர்களையும் வழிநடத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம் கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலை

(53711)(7.6)

# 2015ஆம் ஆண்டிற்கான இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்

## மாந்தை மேற்கு பிரதேசசபை

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார் என்னும் முகவரியிலிருந்து (தொலைபேசி இல 023-3233627/023-3233742) கட்டணங்களை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.**

## 2015ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) | அனுமதிக்கப் பட்ட கொல்களம் | 1 Kg இறைச்சியின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச விலை |
|---|---|---|---|---|---|---|
| | அடம்பன் உப அலுவலகம் | | | | | |
| 01 | காத்தாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 8,000.00 | **450,000.00** | | 400.00 |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | | 400.00 |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | புளியங்குளம் | 400.00 |
| 04 | ஆண்டாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | | 400.00 |
| | விடத்தல்தீவு உப அலுவலகம் | | | | | |
| 05 | விடத்தல்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | **282,000.00** | பெரியமடு | 400.00 |
| 06 | பெரியமடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | **162,000.00** | | 400.00 |
| | இலுப்பைக்கடவை உப அலுவலகம் | | | | | |
| 07 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | **102,000.00** | | 400.00 |
| 08 | மூன்றாம்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 4,000.00 | **102,000.00** | மூன்றாம்பிட்டி | 400.00 |
| | மடு உப அலுவலகம் | | | | | |
| 09 | பெரிய பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | பெரிய பண்டிவிரிச்சான் | 400.00 |
| 10 | காக்கையன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 6,000.00 | **342,000.00** | காக்கையன்குளம் | 400.00 |

01. கேள்வி பத்திரம் வழங்கும் காலம் - **04.11.2014 மு.ப 9.00 – 25.11.2014 பி.ப 2.00 மணிவரை.**
02. கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - **25.11.2014 பி.ப 2.00 மணிவரை.**
03. கேள்வி பத்திரம் திறக்கப்படல் - **25.11.2014 பி.ப 2.00 மணிக்கு.**
04. 25.11.2014 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார்** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்
06. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியினையும் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுணராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. வியாபார நடவடிக்கையின் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்க கூடிய தராசினை பயன்படுத்த வேண்டும்.
10. 2014 ஆம் ஆண்டிற்கான குத்தகை நிலுவை உள்ளவர்கள் **2015** ஆம் ஆண்டிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
11. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் **1/3** பகுதியை **09.12.2014** ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. கேள்வி சம்மந்தமான மேலதிக விபரங்களை மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சு. வரப்பிரகாசம்,**
**தவிசாளர்,**
**மாந்தை மேற்கு. பிரதேசசபை,**
**அடம்பன்.**
03.11.2014

(C/17508)(7.6.3)

# தொழில் விருத்திக்கு நல்லூரில் சங்கம்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான பிரதேச கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதேசசெயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அபிவிருத்திச் சங்கத்தை ஆரம்பித்து வைத்த திட்டமிடல் பணிப்பாளர், சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடியதாக சிறு கைத்தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

சங்கத்தின் தலைவராக சு.பாஸ்கரனும் செயலாளராக மஞ்சுளாவும் 11 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர். (வ-7)

# மெய்வன்மைச் சங்க தொழில்நுட்ப அலுவலர் நேர்முகத் தேர்வு 16இல்

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர் தரம் 3இற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை கடந்த மாதம் 19ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. 40 புள்ளிகளுக்கும் மேல் பெற்றவர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய கடிதங்கள் அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான அட்டைகள், தொழில்நுட்ப அலுவலர் தரம் 4இற்கான சான்றிதழ், கடமையாற்றியமைக் கான பதிவுப் புத்தகம் என்பவற்றைக் கொண்டு வருமாறு மெய்வன்மைச் சங்க தொழில்நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் ஜீ.எல்.எஸ்.பெரேரா கேட்டுள்ளார். (உ-108)

**New College of English**

**(புதிய ஆங்கிலக் கல்லூரி)**

எமது நிறுவனத்தில் அனைவருக்குமான (No agelimit) இலகு வழிபேச்சுப்பயிற்சி கற்பிக்கப்படும்.

பிரிவு: I Spoken & Skill 3Months -3000/=

பிரிவு: II Spoken With Grammar- 6 Months 6000/= மட்டுமே

அனைத்து பிரிவுகளும் November 06 ஆம் திகதி ஆரம்பம்

Lane 077 836 1521

**கடைக் கட்டடம் விற்பனைக்கு**

ஆஸ்பத்திரி வீதியில், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனிக்கு எதிரில் அமைந்துள்ள மூன்று மாடி கடைக் கட்டடம் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

(53715)(12.3.6) 077 100 7231/077 706 4110

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**

The Jaffna Education Centre

(செல்லா தியேட்டருக்கு முன்பாக

(மேல் மாடியில்)

**Spoken English With Grammar**

Short hand Typing , சிங்களம், ESOL, IELTS

ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 03.11.2014 ஆசிரியை: தி.லோகநாயகி

(53761)(6.3.4)

பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.T.P: 076 669 8953

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



(C17532)(7.6.3)

கடந்த 05.10.2014 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் முத்துக்குமாரு சிவகுமாரன்

(பகவான் மருந்தக உரிமையாளர்)

**தோற்றம் : 20.05.1945** **மறைவு : 05.10.2014**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.11.2014) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (04.11.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்)

பகவான் மருந்தகம்,
176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# குருநகரில் சீர்கேடு நிரம்புகின்றது கழிவு

யாழ்ப்பாணம், நவ.3
குருநகர் பிரதேசம் கழிவுப் பொருள்களால் நிரம்பிக் காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.
தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் அந்தப் பகுதியில் கழிவகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளாததால் கழிவுப் பொருள்கள் வீதிக்கு வீதி தேங்கிக் காணப்படுகின்றன.
மக்கள் அதிகமாக மிக நெருக்கமாக வாழும் அந்தப்பகுதியில் கழிவகற்றும் பணிகளை விரைவாக, சீராக மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
குறித்த பிரதேசத்தில் மக்கள் தமது வீட்டுச் சுற்றாடல்களில் உள்ள கழிவுகள் மற்றும் குப்பைகளை வீதியோரங்களில் பொதிகளாக்கி வைக்கின்றனர்.
அந்தக் கழிவுப் பொதிகளை விலங்குகள், பறவைகள் இழுத்துச் செல்கின்றன. இவ்வாறு பறவைகள், விலங்குகளால் சிதறப்படுவதால் அவை நாலா பக்கமும் விசிறப்பட்டு காணப்படுகின்றன.
அந்தப் பிரதேசத்தில் உள்ள அனேகமான வடிகால்வாய்களும் உரிய முறையில் துப்புரவாக்கி சீர் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன.
வடிகால்வாய்கள் துப்புரவு செய்யப்படாததால் கழிவு நீர் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கழிவுகளால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து மக்களை அவை வாட்டி வதைக்கின்றது. பிர தேசத்தில் நுளம்பு மற்றும் இலையான் பெருக்கங்களால் தொற்று நோய்கள் ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.
அதேசமயம் மடத்தடி வீதியில் தண்ணீர் தாங்கிக்கு அருகில் செல்லும் வீதி காக்கைதீவில் கொட்டப்படும் கழிவுகள் போன்று குவிந்து காணப்படுகின்றது.
மக்கள் அதிகமான வாழும் இந்த வீதியில் கழிவுகளை கொட்டுவதாலும் அவை சீராக அகற்றப்படாததாலும் பிரதேசத்தின் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.
இப்படிப்பட்ட கழிவுகளை மக்கள் குடியிருப்பு இல்லாத பகுதியிலே கொட்டுவது சிறந்தது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.
தற்போது பெய்து வரும் மழையால் நகரை அண்டிய கரையோர பகுதி மக்களின் சுகாதாரம் மற்றும் அவர்களின் அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுகாதார பகுதி துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-17)



## காய்ச்சலால் பீடிப்போர் தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி, நவ.3
காய்ச்சலின் பாதிப்பை உணர்ந்துள்ளனர் தென்மராட்சி பிரதேச மக்கள். காய்ச்சல் வந்த உடனேயே விடுதியில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். இதனால் சாவகச்சேரி மருத்துவமனை பொது மருத்துவ விடுதியின் ஆண்கள்,பெண்கள் பிரிவுக் கட்டடங்கள் நிறைந்து நோயாளர்கள் நிலத்தில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது.
பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையை அடுத்து நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளதால் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் உடனடியாக மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று குணமடையாத நிலையில் இரவிரவாக மீண்டும் மருத்துவமனைக்கு வந்து விடுதியில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.
விடுதியில் தங்கியிருப்போருக்கு சகல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்படுவதால் காய்ச்சால் பீடிக்கப்படுவோர் மருத்துவமனையை நாடி வருகின்றனர்.
காய்ச்சலால் பீடித்த நிலையில் தனியார் மருந்தகங்களில் சிகிச்சை பெற பெருமளவு பணம் செலவாகும் என்பதாலும் மருத்துவமனையில் அனைத்துப் பரிசோதனைகள் உட்பட சிகிச்சை வழங்கப்படுவதால் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் மருத்துவமனையை நாடி வருவதாக நோயாளர்களால் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை - மருத்துவமனை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துக் காணப்படுகிறது. தினமும் ஆயிரத்தை அண்மிக்கும் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி மருத்துவமனையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வெளிநோயாளர் பிரிவு இயங்குவது குறிப்பிடத்தக்கது.
(வ-9)



*யாழ். ரயில் நிலையத்தில் உள்ள கிணறு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. அந்தக் கிணற்றின் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டதால் கிணற்றின் உள்ளே குழாய் அமைக்கப்பட்டு மேலதிக நீர் பெறப்பட்டது. அந்தக் கிணற்றில் இருந்து தாங்கிக்கு நீர் ஏற்றப்பட்டு அதனூடாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. (வ-17)*

## பயணிக்க முடியாத நிலையில் முதலுதவிச் சிகிச்சை நிலைய வீதி

அளவெட்டி,நவ.3
மல்லாகம், குளமங்கால் பகுதியில் இயங்கிவரும் முதலுதவிச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லும் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் குண்டும் குழியுமாக மக்கள் பாவனைக்கு ஒவ்வாத முறையில் காணப்படுகிறது.
குறிப்பாக மேற்படி சிகிச்சை நிலையத்துக்குச் செல்லும் கர்ப்பவதிகள், முதியவர்கள் சிறுவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியிலேயே சென்று சிகிச்சையைப் பெறுகின்றனர்.
எனவே, அந்தவீதியை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு புனரமைப்பதற்கு ஆவன செய்யுமாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி நந்தகுமாரிடம் மல்லாகம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நேற்று முன்தினம் நேரில் சென்று கோரிக்கை அடங்கிய கடிதத்தை கையளித்தது. (வ-36)

# சுத்தமான நீரையே பயன்படுத்துங்கள்

### *மாநகரசபைக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம் நவ.3
யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் சுத்தமான நீரை பயன்படுத்துமாறு மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:
"மாநகரப் பகுதியில் நீரினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் முகமாக சகல உணவு கையாளும் இடங்கள் உணவகங்கள் போன்றவற்றில் சமைப்பதற்கும் மற்றும் கழுவும் தேவைக்கும் சுத்தமான நீரை பயன்படுத்த வேண்டும்.
அத்துடன் நுகர்வோரில் குடிதண்ணீர் தேவைக்கு கொதித்தாறிய நீரை பயன்படுத்தவும் நிலையங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
சபையின் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக உணவகங்கள் செயற்பட வேண்டும்.
இந்த அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க தவறும் உணவு கையாளும் நிலையங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இது இவ்வாறிருக்க தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் நீரால் பரவும் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.
இதன் முன்னெச்சரிக்கையாக நீரின் தரத்தை உறுப்படுத்தி மக்கள் அதனை பயன்படுத்த வேண்டும். நுகர்வோர் கூடுதலாக கொத்தாறிய நீரை பருகுவதன் மூலம் நீரால் பரவும் நோயில் இருந்து தப்பிக்கொள்ள முடியும் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.
தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து சில சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் சுகாதார பகுதியினர் வீடு வீடாக சென்று சுற்றாடல்களைப் பார்வையிடுவதோடு சுகாதார வசதி தொடர்பான விழிப்புணர்வு ஆலோசனைகளையும் மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.
வீட்டு சுற்றாடல்களில் சிரட்டைகள், கோப்பைகள் மற்றும் வெற்றுரின்கள் போன்றவற்றை நிலத்தில் வெட்டி புதைக்க வேண்டும். அவற்றில் மழை நீர் இருந்து அதனுடாக நுளம்பு குடம்பிகள் பெருகுவதற்கு வழியேற்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-17)

## கடமைகளைப் பொறுப்பேற்றார் கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி

தென்மராட்சி, நவ.3
கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய கிந்து பண்டார இடமாற்றம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எதிரிசிங்க நொச்சியாகம பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## குளிர்சாதனப் பெட்டி அன்பளிப்பு

அளவெட்டி, நவ.3
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட ஆண்கள் சத்திரசிகிச்சை விடுதிக்கு குளிர்சாதனப்பெட்டி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.
புதிதாக திறக்கப்பட்ட விடுதி என்பதால் அங்கு பல வசதிக் குறைவுகள் உள்ளதால் மருந்துகள் பாதுகாத்து வைப்பதற்கென குளிர்சாதனப் பொட்டி ஒன்றை சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் மருத்துவர் மருத்துவக் கலாநிதிராகவன் அன்பளிப்பாக மருத்துவமனை பதில் மருத்துவ அத்தியட்சகர் திவாகரிடம் வழங்கியுள்ளார். (வ-36)

## இறந்த விசுவாசிகள் தினம் குடாநாட்டில் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், நவ.3
மரித்த விசுவாசிகளை நினைவுகூர்ந்து அவர்களுக்காக செபிக்கும் நினைவு தின நிகழ்வில் நேற்று யாழ். குடாநாட்டில் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ சேமக்காலைகளில் சமய வழிபாடுகள், திருப்பலிகள், கல்லறைத் தரிசிப்பு என்பவற்றில் பெருமளவு மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து இறைவேண்டுதலில் ஈடுபட்டனர்.



யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நேற்று மாலை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இறந்தோர் நினைவுத் திருப்பலி இடம்பெற்றது. இதில் பெருமளவு மக்கள் கலந்து தமது உறவுகளின் ஆன்ம ஈடேற்றத்துக்கான பலியை ஒப்புக் கொடுத்தனர். (வ-135)



மன்னார் - திருக்கேதீஸ்வரத்துக்கான பரீட்சார்த்த ரயில் சேவை கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முற்பகல் 10 மணியளவில் மடுவில் இருந்து வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பரீட்சார்த்த ரயில் மறுநாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் திருக்கேதீஸ்வரம் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசபிரிய, மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி.ஸ்டான்லி டி மெல், அரச உயர் அதிகாரிகள், இந்திய தொழிநுட்பவியலாளர்கள், இந்திய அதிகாரிகள், புகையிரத நிலைய அதிகாரிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ற)

# உள்ளக வீதிகளில் மட்டும் சோதனை

### பொலிஸாரின் நடவடிக்கையால் மக்கள் அதிருப்தி

வவுனியாவில் உள்ளக வீதிகளுக்குள் இரவு நேரங்களில் வீதி போக்குவரத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் வாகனசோதனை நடவடிக்கை குறித்து பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் பிரதான வீதிகளில் ஏராளமான சிறிய விபத்துக்கள் பல இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் பிரதான வீதிகளில் போதிய பொலிஸாரைக் காணமுடியவில்லை என்றும் மீறாக குறுக்கு வீதிகள் சிறிய ஒழுங்கைக்குள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றும் - மக்களிடம் தண்டப் பணத்தை அறவிடுவதில் குறியாக உள்ளனர் என்றும் - மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து பொலிஸாரிடம் கேட்டபோது: விபத்தை தடுப்பதற்காகவே தாம் இத்தகைய செயலில் ஈடுபடுகின்றார்கள் என்று- அவர்கள் தெரிவித்தனர். (ற-402)

# வீதியைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்கு செல்லும் மூன்றுமுறிப்பு வன்னிவிளாங்குளம் வீதியைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பாலைப்பாணி பிள்ளையார்குளம் கொம்புவைத்தகுளம் ஆகிய கிராமங்களுக்கு ஊடாக செல்லும்மூன்றுமுறிப்புவன்னிவிளாங்குளம் வீதி இன்று வரை புனரமைக்கப்படாமலும் காணப்படுகின்றது.

அதனால் மேற்படி கிராமங்களில் வாழும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே குறித்த வீதியை புனரமைத்து த்ருமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-55)

## தேங்காய் திருடனுக்கு விளக்கமறியல்



முல்லைத்தீவு, நவ.3

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில், ஒரு தொகை தேங்காய்களை திருடியதாகக் கூறப்படும் சந்தேக நபரை இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள குறித்த தோட்டத்தில் சந்தேக நபரும் மற்றுமொறு நபரும் சேர்ந்து தேங்காய்களை திருடிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு குறித்த இரு சந்தேக நபர்களும் தேங்காய்களைத் திருடிச் செல்வதை அவதானித்த தோட்டத்தில் பணிபுரியும் முதியவர் ஒருவர் இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களில் ஒருவரை கடந்தவியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளனர். மற்றையவர் தலைமறைவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் தலைமறைவாகியுள்ள இரண்டாவது சந்தேக நபரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட முதலாவது சந்தேக நபரை கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது, அவரை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ற)

# காலபோக நெற்செய்கைக்கான உரம் துரித கதியில் விநியோகம்

### கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான மானிய உரம் துரித கதியில் வழங்கப்பட்டு வருகின்றது என்று கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக செய்கைக்கான மானிய உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஐம்பத்தி ஒன்பதாயிரம் ஏக்கருக்குரிய மானிய உரம் அந்தந்த கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனவும் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தில் கடந்த 20ம் திகதி முதல் மகிழங்காடு, கணேசபுரம், கோரக்கன்கட்டு, பரந்தன், முரசுமோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரி மற்றும் நீர்ப்பாசனக் குளங்களின் செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கான மானிய உரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதாவது மூன்று ஏக்கர் பயிர் செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு ஒரே தடவையில் முழுமையான உர விநியோகமும் மூன்று ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையான செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு இரண்டு கட்டங்களாகவும் மானிய உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி கமநல சேவை நிலையம் தெரிவித்துள்ளது. (ற-55)

# மன்னார் பொது வைத்தியசாலையில் குருதிப் பரிசோதனை இயந்திரம் பழுது

### நோயாளர்கள் பெரும் சிரமம்; நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மன்னார் பொது வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள்தொடர்ச்சியாகக் காணப்பட்டு வரும் நிலையில் மன்னார்பொதுவைத்தியசாலைக்கு இரத்தப்பரிசோதனைகளுக்காகச் செல்லும் நோயளர்களை தனியார் இரத்தப் பரிசோதனை நிலையங்களுக்குச் சென்று இரத்தபரிசோதனைகளை மேற்கொண்டு வருமாறு திருப்பி அனுப்புவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னாரில் வைரஸ் காய்ச்சல் பரவி வரும் நிலையில்மூன்றுநாள்களுக்குமேல் தொடர்ச்சியாக காய்ச்சல் காணப்பட்டால் குறித்த நபர் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும். ஆயினும் இரத்தம் பரிசோதனை செய்யும் இயந்திரம் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் வெளியில் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் பொது வைத்தியசாலையில் உள்ள குறித்த வைத்தியர்கள் கூறுவதாக பாதிக்கப்பட்ட நோயளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் கவனம் செலுத்திய உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட நோயளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-56)

# விதை தானியங்கள் வழங்கல் வவுனியாவில்

வவுனியா, நவ.3

வவுனியா, செட்டிகுளம், புதுக்குளம் ஆகிய பகுதிகளில் 'யுஎஸ் எயிட்'நிறுவனம், வாழ்வெழுச்சி திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளும் உழுந்து பயிற்செய்கைக்கான விதை தானியங்கள் வழங்கப்பட்டன. அவற்றை அமைச்சர் ரிசாத் பதியுதீன் வழங்கினார்.

'யுஎஸ்எயிட்' நிறுவனம் வாழ்வெழுச்சி திட்டத்துடன் இணைந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 540 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து பயிர்செய்கையை மேற்கொள்வதற்காக 420 குடும்பங்களுக்கு விதைதானியங்களை வழங்குகின்றது. ஏக்கர் ஒன்றுக்கு 12 கிலோகிராம் வீதம் இந்த விதை தானியம் வழங்கப்பட்டு வருகிறது.



இதனடிப்படையில் செட்டிகுளம், புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 129 குடும்பங்களுக்கான விதை தானியத்தை அமைச்சரும், யுஸ் எயிட் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளரும் இணைந்து வழங்கினர்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக, வடக்கு மாகாண ஆளுநரின் ஆணையாளர் முகைதீன், வர்த்தக கைத்தொழில் அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் முத்து முகமது, அமைச்சரின் பிரத்தியேக இணைப்பாளர் அப்துல் பாரி, யுஸ்எயிட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் டேவிட்ரயர், மற்றும் பிரதேச மக்கள், கமக்கார அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-402)




நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு உதவும் பொருட்டு, வவுனியா மாவட்ட வர்த்தகர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் வவுனியா நகரமெங்கும் நிவாரணப் பொருள்கள் சேகரிப்பில் ஈடுபட்டனர். வவுனியாவின் நகரப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் முக்கியஸ்தர்களின் ஒன்றிணைவில் வர்த்தக சங்கத்தினருடன் பொதுமக்களும் இணைந்து நிவாரணப் பொருள்களைச் சேகரித்தனர். (ற-402)

# அளுத்கமவில் மீண்டும் பதற்றம்: சிங்கள- முஸ்லிம் இளைஞர்களிடையே மோதல்

கொழும்பு, நவ.3
அளுத்கம, தர்கா நகரில் நேற்றுமுன்தினம் மாலை சிங்கள- முஸ்லிம் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, கடும் பதற்றம் நிலவியது.

தர்கா நகர் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் அயலிலுள்ள பதிராஜகொட ஊரில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியொன்றில் கலந்து கொண்டு வெற்றியீட்டி உள்ளனர். அவர்கள் திரும்பி வரும் வழியில் சிங்கள நபரொருவர் பதிராஜகொட விகாரை அருகில் பாதையை மறித்து தனது சைக்கிளை நிறுத்தி வம்புக்கு இழுத்துள்ளார். அதனையடுத்து இந்தச் சம்பவம் சிங்கள- முஸ்லிம் இளைஞர்களின் மோதலாக உருவெடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.


இதன்போது அந்த வழியால் சென்ற. இந்த மோதலுடன் சம்பந்தமே இல்லாத திருமதி தௌபீக் என்ற பெண்மணி கடுமையான தாக்குதலுக்குள்ளாகி, மண்டை உடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தின்போது விகாரையின் மணி தொடர்ச்சியாக ஒலிக்கப்பட்டு சிங்களவர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக முஸ்லிம் இளைஞர்கள் தமது வாகனங்களில் ஏறி, காயங்களுடன் தப்பியோடியுள்ளனர்.

எனினும் ஒரு பல்சர் ரக மோட்டார் வண்டி மட்டும் சிங்களவர்களின் கையில் சிக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் தர்கா நகருக்குள் சோதனை நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் காயமடைந்த பெண்ணின் இரண்டு மகன்களான இம்ரான், இன்சாப் ஆகிய இரண்டுபேரையும் அங்கிருந்த மற்றுமொரு நபரையும், அயல் வீட்டிலிருந்து மூன்று பேரையும் கைது செய்து சென்றுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு சம்பவத்துடன் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று தெரிய வருகின்றது. கலவரம் நடந்த இடத்தில் பல்சர் மோட்டார் வண்டியை விட்டுவந்த இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளார்.



படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தௌபீக்கை அவரது குடும்பத்தவர் பார்வையிடவும் பொலிஸார் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக தர்கா நகரில் மீண்டும் கடும் பதற்றமான சூழல் தோன்றியுள்ளது. ஆங்காங்கே பொலிஸார் குவிக்கப்பட்டு அச்ச உணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் கடுமையான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் - தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



## சீன நீர்மூழ்கி கொழும்புக்கு

கொழும்பு, நவ.3
கொழும்பு துறைமுகத்துக்கு சீனாவின் நீர்மூழ்கி, போர்க் கப்பல்கள் கடந்த வெள்ளிக்கிழமை வந்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா கடந்த வாரம் வெளியிட்ட கரிசனைகளையும் மீறி சீனாவின் கடற்கலங்கள் மீண்டும் இலங்கை வந்துள்ளமை இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் நீர்மூழ்கி, போர்க் பல்கள் வரும் ஆறாம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் எனத் தெரியவருகின்றது. சீன நீர்மூழ்கி இந்த வருடத்தில் மாத்திரம் 3 தடவைகள் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அரசின் மறுமொழிக்கு ஹெல உறுமய காத்திருப்பு

கொழும்பு, நவ.3
எதிர்வரும் தினங்களில் தங்களின் நிபந்தனைகளுக்கு அரசு வழங்குகின்ற மறுமொழியின் அடிப்படையிலேயே, வரவு -செலவுத் திட்டத்துக்கான இறுதி வாக்கெடுப்பில் ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

வரவு-செலவுத் திட்டம் மீதான நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது ஜாதிக ஹெல உறுமய சபையில் இருக்கவில்லை.

அரசிடம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் தொடர்பில் இன்னும் பதில் கிடைக்காத நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது.

இந்த நிலையில் அடுத்து வரும் நாள்களில் இதற்கான பதிலை எதிர்பார்ப்பதாக அந்த கட்சி கூறியுள்ளது. (ற)

## கமலேஷ் சர்மாவின் கருத்தால் அதிருப்தி

### தேர்தல்கள் திணைக்களம் கூறுகின்றது

கொழும்பு, நவ.3
பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவின் கருத்துக்கு தேர்தல் திணைக்களம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் திணைக்களம் முழு அளவில் சுயாதீனமாக இயங்குவதில்லை என அண்மையில் கமலேஷ் சர்மா தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கு தேர்தல் திணைக்களம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை தேர்தல் திணைக்களத்தின் மீது எவரும் அழுத்தங்களை பிரயோகிப்பதில்லை என பிரதித் தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்க தெரிவித்துள்ளார். தேர்தல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு எந்தவொருதரப்பினரும் அழுத்தங்களையோ இடையூறுகளையோ ஏற்படுத்துவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் திணைக்களப் பணிகள் சுயாதீனமான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அரசுக்கு எதிராக மும்முனைத் தாக்கு

### அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுகின்றார்



கொழும்பு, நவ.3
அரசுக்கு எதிராக மும்முனைத் தாக்குதலுக்கான தயார்படுத்தல்கள் நடைபெறுகின்றன என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ. வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசுக்கு எதிராக மும்முனைத் தாக்குதல் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி ஒருபுறம், ஜே.வி.பியின் இடதுசாரித் தாக்குதல் ஒருபுறம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இனவாதத் தாக்குதல் ஒருபுறம் என்று மும்முனைத் தாக்குதல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் இவை எல்லாவற்றையும்விட பொதுமக்கள் மத்தியிலிருந்து எழும் எதிர்ப்புச் சுனாமியில் ஐ.தே.க. விரைவில் அடித்துச் செல்லப்பட்டுவிடும். எதிர்க்கட்சிகளின் அரசியல் பலவீனம் இந்த வரவு செலவுத்திட்டத்திலேயே வெளிப்பட்டு விட்டது.

ஜனாதிபதியின் அரசியல் ஆளுமைக்கு முன்னால் எதிர்க்கட்சிகள் இனியும் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாது. வாக்குகளைக் குறிவைத்து அளிக்கப்பட்ட லஞ்சம் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டினாலும் வரவு-செலவுத்திட்டத்தின் சாதகம் குறித்து பொதுமக்கள் நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## சந்திரிகாவுடன் இணைய இடதுசாரிகள் தீர்மானம்

கொழும்பு, நவ.3
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுடன் இணைந்து செயற்பட, ஆளும் கட்சியின் இடதுசாரி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த மூன்றாம் தடவையாகப் போட்டியிடத் தீர்மானித்தமை, மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தமை ஆகியவற்றுக்கு அவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் முக்கிய இடதுசாரி கட்சி உறுப்பினர்களே இவ்வாறு சந்திரிகாவுடன் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது தனியான கூட்டணி ஒன்றை அமைத்து செயற்பட திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை - ஜனாதிபதி மஹிந்தவுக்கு அதரவளிக்க எடுத்த தீர்மானம் காரணமாக சமசமாஜ கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.



1977ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருவதாக சமசமாஜ கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் லால் விஜேவர்தன தெரிவித்துள்ளார். கட்சியின் 75 வீதமானவர்கள் இந்த நிலைப்பாட்டை தொடர்ந்தும் கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார். ஜே.வி.பி. இன்று செல்லும் பயணம் குறித்து திருப்தி அடைய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## அதிருப்தியால் சோபித தேரர் வெளிநாட்டுக்கு



கொழும்பு, நவ.3
அதிருப்தி காரணமாக மாதுளுவாவே சோபித தேரர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார் என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு சோபித தேரர் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சோபித தேரர் அண்மைக்காலமாக பேச்சு நடத்தி வருகின்றார். இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனவும்- அதனால் சோபித தேரர் அதிருப்தி அடைந்துள்ளார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பயணத்தின் பின்னர் சோபித தேரர் கடுமையான அரசியல் தீர்மானங்களை எடுக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 5 ஆம் திகதி சோபித தேரர் இலங்கை திரும்பவுள்ளார். என்ன காரணத்துக்காக சோபித தேரர் இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ளார் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ற)

## ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்படுவார் நோனிஸ்?

கொழும்பு, நவ.3
பிரிட்டனுக்கான இலங்கையின் முன்னாள் உயர் ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற விருந்து பசாரத்தின்போது வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தாக்கியதாக கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கலந்தாலோசனை செய்ததன் பின்னர் ஜனாதிபதி கிறிஸ் நோனீஸை தமது ஆலோசகராக நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



எவ்வாறெனினும், கிறிஸ் நோனீஸுக்குஎதிராக இலங்கை வெளிவிவகார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நோனீஸுக்கு எதிரான பல முறைப்பாடுகளை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் செனுகா செனவிரட்னவே முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நோனீஸ் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்வாரா? இல்லையா? என்பது பற்றிய தகவல்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. (ற)

# ஜன்னல் இல்லாத விமானம்





உலகின் முதல் ஜன்னல் இல்லாத விமானம் விரைவில் அறிமுகமாகும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று உலகின் ஜன்னல் இல்லாத விமானத்தை சோதனை ஓட்டம் மூலம் பரிசோதிக்கவிருப்பதாகவும், இந்த விமானத்தில் பயணிக்கும் பயணிகள் வெளியே உள்ள காட்சிகளை தெளிவாக பார்க்கும் வகையில் விமானம் வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
விமானங்களில் ஜன்னல்களுக்குப் பதிலாக முழு நீள திரைகள் அமைக்கப்பட்டு அதன் வழியாக பயணிகள் பறக்கும் விமானத்தில் இருந்து வெளியே உள்ள காட்சிகளைப் பார்க்கலாம். பயணிகளுக்கு வெளிப்புற காட்சிகள் தெரியவேண்டாமென்றால் அதற்கேற்பவும் மற்றியமைத்துகொள்ளலாம்.
இது குறித்து செயல்முறை கண்டுபிடிப்பு மையம் தெரிவித்துள்ள தகவலில், விமானத்திலிருந்து சிறிய ஜன்னல் வழியாக உலகை பார்த்த காலம் போய்விட்டது. எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் விமானங்கள் உலகின் தெளிவான பரந்து விரிந்த காட்சியை பயணிகளுக்கு அளிக்கும். நாங்கள் அதற்காக அதிக வளையும் தன்மைக்கொண்ட, உயர் வரையறை டிஸ்பிளே தொழில்நுட்பத்தை தயாரித்து வருகிறோம். விமானத்தின் உட்புற சுவர்களில் இந்த டிஸ்பிளே பொருத்தப்பட்டு அதன் மூலம் கமராக்களில் இருந்து வீடியோக்களைக் கூட ஒளிப்பரப்ப முடியும் என்று தெரிவித்துள்ளது.

# படப்பிடிப்புத் தளத்தில் விபரீதம்



ஹிந்தி நடிகை ரியாகானை படப்பிடிப்பு அரங்கில் கற்பழிக்க முயற்சி நடந்தது. இந்தச் சம்பவம் மும்பை பட உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.
ரியாகான் ஹிந்தியில் முன்னணி கதாநாயகியாக இருக்கிறார்.
மும்பையில் ரியாகான் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இதில் கடந்த சில நாள்களாக நடித்து வந்தார். இரு தினங்களுக்கு முன் தான் நடிக்க வேண்டிய காட்சிகளை நடித்து முடித்து விட்டு படப்பிடிப்பு அரங்கில் ஓரமாக உட்கார்ந்து இருந்தார்.
படக்குழுவினர் வேறு காட்சிகள் எடுப்பதற்காக இன்னொரு இடத்துக்குச் சென்று விட்டனர். ரியாகான் மட்டும் தனியாக இருந்தார்.
அப்போது அங்கு வந்த தயாரிப்பு நிர்வாகி, ரியாகான் வாயை பொத்தி கற்பழிக்க முயன்றார். ரியாகான் ஆவேசமாக அந்த நபரை அடித்து தள்ளி விட்டு வெளியே ஓடி விட்டார்.
இதுகுறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. ஆனால் தயாரிப்பாளரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார். இதையடுத்து தயாரிப்பு நிர்வாகியை வரவழைத்து கடுமையாகக் கண்டித்தார். படப்பிடிப்பில் இருந்து அவரை வெளியேற்றியும் விட்டார்.

# இப்படியும் ஓர் திருவிழா



சீன மக்கள் வினோத திருவிழா ஒன்றை கொண்டாடி வருகின்றனர். காய்கறி திருவிழா என்ற பெயரில், சீன சமூகத்தினர் தங்கள் கன்னாங்களிலும், தோல்களிலும் அலகுகள் குத்திக்கொண்டு நேர்த்தி கடனை செலுத்துகின்றனர்.
கன்னத்தில் கத்திகள், வாள்கள், குடைகள் போன்று பல விதமான தோற்றங்களில் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை செலுத்துகின்றனர். இவர்கள் தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துவதால் அவர்கள் நரகத்தில் இருந்து விடுபட்டு சொர்க்கத்துக்குச் செல்வார்கள் என்று அவர்களது நம்பிக்கை.
தீய எண்ணங்களில் இருந்து விடுபடவும் இந்தத் திருவிழாவில் அவர்கள் முகம் மற்றும் தோல்களில் அலகுகள் குத்தி கொள்கின்றனர்.
சீனா நாள்காட்டியின் படி தற்போது ஒன்பதாவது மாதத்தில் அங்கு இறைச்சியை உண்பதை தவிர்த்து முற்றிலும் காய்கறியை உணவில் சேர்த்துக் கொள்வதால் மனம் மற்றும் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது அவர்களது நம்பிக்கை ஆகும். இதற்காகவே அவர்கள் இந்த மாதத்தில் காய்கறி விழாவை எடுக்கின்றனர்.

# ஒரு வாரத்தில் இரத்த நாளம்



இரண்டு தேக்கரண்டி இரத்தத்தைக் கொண்டு 7 நாள்களில் ரத்தநாளம் வளரச் செய்து சுவீடன் விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர். இரைப்பை, உணவுக் குழாயிலிருந்து கல்லீரலுக்குச் செல்லும் இரத்த நாளம் ஒரு சிறுவனுக்கு வளர்ச்சியடையாமல் இருந்தது. அவனுக்கு இரத்த நாளத்தை வளர்க்க மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றுள்ளது.
சுவீடன், கோதன்பெர்க் பல்கலைக்கழகத்திலுள்ள சல்கிரேன்ஸ்கா பேராசிரியர் மைக்கல் ஓலாவ்ஸன் தலைமையிலான விஞ்ஞானிகள் இந்தச் சாதனையைச் செய்துள்ளனர்.
நோயாளியின் ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி, புதிய இரத்த நாளத்தை வளரச் செய்து இரு உறுப்புக்களையும் முறையாக இணைந்து செயற்பட வைத்துள்ளோம் என்று விஞ்ஞானி மைக்கல் ஓலாவ்ஸன் தெரிவித்துள்ளார்.
எலும்பு மச்சையைத் துளையிட்டு ஸ்டெம்செல்களை எடுப்பதற்கு மாற்றாக புதிய முறை கையாளப்பட்டுள்ளது. இந்த முறையில் 25 மில்லி (சுமார் இரு தேக்கரண்டிகள்) இரத்தம் தேவையான ஸ்டெம்செல்களைப் பெறுவதற்கு போதுமானதாக இருந்தது. மேலும், புதிய இரத்த நாளம் வளர்வதற்கு அந்த இரத்தம் வெகுவாக ஊக்குவித்தது. அனைத்து நடைமுறைகளும் ஒரே வாரத்தில் நிறைவு பெற்றன என்று தெரிவித்துள்ளார் பேராசிரியர் மைக்கல்.

எந்த நேரமும் பொண்ணுங்க போட்டோக்கு Like போட்டுகிட்டு, பொண்ணுங்க கூட மட்டும் Chat பண்ணிட்டு இருக்குறான்...



இவ்னலாம் புடிங்க சார்... புடிச்சு ஜெயில்ல போடுங்கசார்...

எரிந்து விழும் பெண்கள் எல்லாம் சீதையும் அல்ல...



சிரித்துப் பேசும் பெண்கள் எல்லாம் மாதவியும் அல்ல...

# முடிவுக்கு வருகின்றது மகாபாரதம்

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வந்த மகாபாரதம் தொடர் பெரும் வரவேற்பை பெற்றது.
இதற்கு முன்பு மகாபாரத தொடர் பல்வேறு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானாலும், இந்த தொடருக்கு தனி வரவேற்பு இருந்தது.
காரணம் இந்த தொடர் மகாபாரதத்தின் கிளை கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் கதை, பின்னணி ஆகியவற்றை சொல்லி அதனை மகாபாரதக் கதையுடன் இணைத்தது. இந்தப் பாணி மக்களை மிகவும் கவர்ந்தது. சத்யவதி - ஷஜுந்தனு கதையில் தொடங்கி மகாபாரத போருடன் நிறைவடைகிறது. கதாபாத்திரத்துக்கு ஏற்ற நடிகர்கள் தேர்வு, அவர்களின் மிரட்டலான நடிப்பு, பிரமாண்ட அரங்குகள், பிரமிக்க வைக்கும் ஒப்புனை என்று மகாபாரதத்தின் ஒவ்வொரு 'எபிசோடும்' ஒரு திரைப்படத்துக்கு நிகராகவே அமைந்திருந்தது.
இந்த நிலையில் தொடர் இன்றுடன் நிறைவடைகிறது.



# மாற்றத்தின் மறுபக்கத்தில் பெண்கள்



சங்கவி

இன்றைய கால கட்டத்தில் வீட்டிலும், வீட்டுக்கு வெளியிலும் ஏராளமான போராட்டங்களைப் பெண்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பெண்கள் வேலைக்குச் செல் வதை ஏற்றுக்கொண்ட குடும்பமும், சமூகமும் அதனால் ஏற்படுகிற அதீதப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இல்லை. பெண்கள் ஏற்கனவே செய்து கொண்டிருந்த அனைத்துப் பொறுப்புக்களும் அவர்கள் மீதே மீண்டும் சுமத்தப்பட்டு விட்டன. பணிச்சூழல் காரணமாக பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிட முடியாமை, நோய் வாய்ப் பட்டிருக்கும்போது முழுவதுமாகக் குணமாகும்வரை அருகிலிருந்து கவனித்துக்கொள்ள முடியாத சூழல் போன்றவை- வேலைக்குப் போகும் தாய்மார்களிடம் மிகுந்த குற்றவுணர்வை ஏற்படுத்துகின்றன. பெண்கள் வேலைக்கும், உணர்வுப் போராட்டத்துக்கும் இடையே சிக்கித் தவிக்க வேண்டியிருக்கிறது.

வேலைக்குப் போகும் பெண்கள் வீட்டில் இருக்கும் நேரத்தை விட அலுவலகத்தில் கழிக்கும் நேரம் அதிகம். சக பணியாளர்களான ஆண்களோடு பணி நிமித்தம் நிறைய நேரம் செலவிட வேண்டியுள்ளது.

தொடர்ந்து ஒருவரோடு நீண்ட காலம் பணியாற்றும்போது சில நேரங்களில் ஒருவருக்கொருவர் ஈர்க்கப்படும் சந்தர்ப்பங்களையும் பெண்கள் கடந்து வர வேண்டியிருக்கிறது. பெண்ணின் உணர்வுகளை எப்போதும் சந்தேகத்தின் நிழல் படிந்த கண்களோடு உற்று நோக்கும் சமூகத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கணினி, ஊடகம் போன்ற துறைகளில் வேலை செய்கிற பெண்கள் பதவி உயர்வு, போட்டிச் சூழலை முன்னிட்டுத் திருமணம், குழந்தைப்பேறு ஆகியவற்றைத் தள்ளிப் போடவும் நேர்கிறது. இதனால் ஏற்படும் மன உளைச்சலையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

தொழில்நுட்ப வசதிகள் அறிமுகம் ஆகும் போதே, அவை பெண்களுக்கு எதிராகப் பயன்படுகிற ஆயுதங்களாகக் கூர் தீட்டப்படும் சாத்தியங்களும் அதிகமாகிவருகின்றன. ஆனால் அதே தொழில்நுட்பத்தை நவயுகப் பெண்கள் இன்னும் கூர்மையான எதிர் ஆயுதமாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதுதான் இந்தக் கால் நூற்றாண்டுக் காலத்தின் வெற்றி.

எல்லா இடர்களையும், நெருக்கடிகளையும் தாண்டி நம்பிக்கை மிகுந்த நாள்களையே பெண்கள் இந்தத் தேசத்துக்குப் பரிசளித்திருக்கிறார்கள் என்பதும், பெண்கள் வாழ்வில் ஏற்பட்ட இந்தத் தாக்கம் கூண்டுகளை உடைத்துச் சிறகுகளை விரித்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத நிஜம்.

> தொழில்நுட்ப வசதிகள் அறிமுகம் ஆகும் போதே அவை பெண்களுக்கு எதிராகப் பயன்படுகிற ஆயுதங்களாகக் கூர் தீட்டப்படும் சாத்தியங்களும் அதிகமாகிவருகின்றன. ஆனால் அதே தொழில்நுட்பத்தை நவயுகப் பெண்கள் இன்னும் கூர்மையான எதிர் ஆயுதமாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டு விட்டார்கள்

# எப்போதும் புதுமைப் பெண்களே!

சோபனா



அறிவும் திறமையும் ஒருங்கே பெற்ற பெண்களை இந்தச் சமூகம் அங்கீகரித்து வரவேற்கிறது. ஆனால் ஆணாதிக்கச் சமூகத்துக்கு அடங்கி ஒடுங்கி இருந்த காலத்தில் வேண்டுமென்றால் பெண்களை அழகுப் பதுமைகளாகப் பார்த்திருக்கலாம். இது சாதிக்கும் பெண்களின் யுகம் என்பதைப் புரியாமல் சிலர் அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசலாம். ஆனால் அதையும் கடந்து பெண்கள் சாதித்துள்ளார்கள்.

நளினமும் அழகும் பெண்களின் உடைமைகளே. ஆனால் அதை பொது இடத்தில், பொதுப் பார்வையில் காட்சிப் பொருளாக்குவது நியாயமா? அதைப்பற்றி பெண்களும் கவலைப்படுவதில்லை. விண்ணில் பறந்து சாகசம் செய்யும் பெண்மையை வியக்கலாம். ஆனால் அவர்களே விளம்பரம் என்னும் மாயைக்குள் விழுந்துகிடந்தால்? எழுத்தில், பேச்சில், சிந்தனையில் இப்படி எதிலுமே பெண்கள் போதையூட்டும் போகப்பொருளாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். இதைப் பெண்கள் போராட்ட உணர்வோடு எதிர்கொள்ளுதல் வேண்டும்.

ஔவையார், காரைக்கால்அம்மையார், போன்றோர் முதுமையில் கொள்ளை அழகுடன் இருந்தார்கள். ஆண்டாளும், மீராவும் இளமையில் பேரழகுடன் இருந்தார்கள். அதற்காக அவர்களை இந்தச் சமூகம் அழகுப் பதுமைகளாகவா பார்த்தது? இன்றைய கால மாற்றத்தாலும் கலாசார சீரழிவாலும் உயர் பதவியில் இருக்கும் பெண்களைக்கூட உடல்ரீதியாக விமர்சிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. பாரதியாரின் கவிதைகளில் நிரந்தர இடம்பிடித்திருக்கும் பெண்கள் எப்படி அழகுப் பதுமைகளாக இருக்க முடியும்?

பெண்களின் அழகைக் கேவலமாக விமர்சிக்கும் வீணர்களை எத்தனைப் பாரதி வந்தாலும் திருத்தவே முடியாது. சமையலறையில் வெந்து புழுங்கும் பெண்களுக்கு மத்தியில் சாதனைப் பெண்களைப் பாராட்டாமல் விட்டால்; கூடப் பரவாயில்லை. தூற்றாமல் இருக்கலாம். பெண்கள் மீது விழும் இதுபோன்ற அற்ப புழு விமர்சனங்கள் அவர்களின் சூரியப் பிரகாச வெற்றியில் கருகிப்போகும். அதையும் தாண்டி பெண்கள் சாதித்தால் அவர்களையும் அழகு சார்ந்த கண்ணோட்டத்துடன் பார்ப்பதை என்ன சொல்வது? ஒரு ஆண் வெற்றி பெற்றால் சக நண்பர்கள் பாராட்டுவார்கள். இங்கே ஒரு பெண் வெற்றி பெற்றால் அதில் ஏதோவொரு உள்ளர்த்தம் இருப்பதாகவே இன்னொரு பெண் நினைக்கிறாள். இந்தப் போக்கும் மாறியே ஆகவேண்டும்.

உயிரைத் திண்ணமாக மதித்துப் பணிபுரிந்தாலும், நேரம், காலம் பார்க்காமல் உழைப்பைக் கொட்டினாலும், தகுதி மூலம் உயர்பதவிகளை அடைந்தாலும் இந்தச் சமூகம் சில சாட்டை வார்த்தைகளாலேயே அவர்களை முடக்கிப்போட்டுவிடுகிறது. "சிரித்துப் பேசியே காரியம் சாதித்துக் கொள்வாள்' என்ற ஆணின் வார்த்தைகளைத் தோற்கடித்துவிடும் அளவுக்குப் பெண்களின் வார்த்தைகளும் வலம் வரும். ஒவ்வொரு பெண்ணும் இதுபோன்ற விமர்சனங்களைத் தாங்கித்தான், தாண்டித்தான் சாதிக்க வேண்டியிருக்கிறது. அடுப்படியில் மட்டுமே முடங்கிவிடாமல் பெண்கள் இன்று பல்வேறு துறைகளிலும் சாதித்து வரும் நிலையில், பெண்களை மட்டம் தட்டுவதும் புறம ;பேசுவதும் நகைப்புக்குரியது. பெண்கள் சூடிய வாகைகள் எல்லாமே அவர்களின் திறமையாலும் உழைப்பாலும் பெற்றவையே தவிர அவர்களின் புற அழகினால் வாய்த்தவை அல்ல. பெண்களின் உயர்வைச் சகிக்க முடியாமல் வெறும் பொறாமை உணர்வில் அபத்தமாகச் சிந்திப்பதைக் கைவிட வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தும்போது திறமை மட்டுமே முக்கியத்துவம் பெறும். அழகு அங்கே இரண்டாம்பட்சம்தான். ஆனால் திறமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அழகைப் பற்றிப் பேசும் அநாகரிக மனிதர்களை உதறித்தள்ளிவிட்டு அடுத்தகட்டத்துக்குப் பயணிப்பதே சிறந்தது.

ஆண்கள் திறமையாலும், பெண்கள் அழகாலும் முன்னேறுகிறார்கள் என்பது திறமையற்றவர்களால் சொல்லப்படும் வெற்றுக் கோஷம். இதைப் பொருட்படுத்தாமல் பெண்கள் தங்களது பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும். வெறும் அழகால் யாராலும் இங்கு ஜெயிக்க முடியாது. திறமையே ஒரு அழகென்பது வெற்றி பெற்றவர்களுக்குத் தெரியும்.

பெண்கள் தங்களது திறமையால் முன்னேறும் போது பலவிதமான கசப்பான அனுபவங்களைச் சந்திக்கின்றனர். தங்களால் சாதிக்கமுடியாததை பெண்கள் சாதிப்பதைப் பார்த்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஒருசிலர் கேலி செய்வதை நாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவே கூடாது. சமுதாயத்தில் தங்களது திறமை, படிப்பு ஆகியவற்றால் பெரிய நிறுவனங்களில் உயர்பதவிகளில் இருக்கும் பெண்களே இதற்கு எடுத்துக்காட்டு.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சர்மா இடித்துக் கூறியவை தலைவர்கள் காதில் ஏறுமா?

வடக்கு மாகாண மக்களுக்கு நிலைத்து நிற்கக் கூடிய அதிகாரங்களை வழங்குங்கள். அத்துடன் அவர்களின் நியாயமான குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு அவர்களின் தலைவர்களுக்கும் அதிகாரங்களை வழங்குங்கள். இவ்வாறு இலங்கை அரசுக்கும் அதன் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடித்துக் கூறிவிட்டுச் சென்றுள்ளவர் ஜனாதிபதி ராஜபக்ஷவால் இப்போது தலைமை வகிக்கப்படுகின்ற பொதுநலவாய அமைப்பின் செல்வாக்கு மிகுந்த செயலாளர் நாயகமாக இருக்கும் கமலேஷ்சர்மா ஆவார் அவர்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா, கடந்த மாதம் 26 ஆம் திகதி இலங்கைக்கு வந்து ஜனாதிபதி ராஜபக்ஷ, மற்றும் பலரையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். வடபகுதிக்கு நேரில் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் பார்த்தும் அறிந்தும் புரிந்துகொண்டார்.

அரசுத் தலைவர்களும் அவர்களின் ஆதரவு அதிகாரிகளும் வடக்கின் நிலை பற்றியும் அங்குள்ள மக்களுக்காக தாங்கள் செய்கின்ற பணிகள் பற்றியும் விலாவாரியாக எடுத்து விளக்கியிருப்பார்கள்.வழக்கம் போலவே வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பினர் தம்முடன் ஒத்துழைக்கிறார்கள் இல்லையென்பதையும் எடுத்துக் கூறி அவரை நம்ப வைக்க முயன்றிருப்பார்கள். ஆனால் கமலேஷ்சர்மா இலங்கை அரசுக்கு துதிபாட வேண்டிய நிலையிலுமில்லை, வடக்கு மாகாண மக்களின் ஆதரவையும் வாக்குச் சீட்டையும் எதிர்பார்க்க வேண்டியவருமில்லை. தாம் சார்ந்துள்ள அமைப்பின் தலைவர் ஆட்சிபுரியும் நாடு என்றாலும் அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் என்ற முறையில் தன் மனச்சாட்சிக்கு சரியென்றுபட்ட விடயங்களை வெளிப்படையாக சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியவை இலங்கை அரசுக்கும் தலைவர்களுக்குப் பிடித்தமாக இருந்திருக்காது. அதனால் மிக பவ்வியமாகவே ஆனால் சுறுக்கென்று தைக்கும் விதத்தில் விடயங்களை வெளியிட்டிருந்தார். கடந்த வாரம் புதன்கிழமை கமலேஷ்சர்மா தமது இலங்கை பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட வேளையில் ஊடகவியலாளர்களிடம் பேசினார்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றி அவருக்கு நிறையவே விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும் அதில் அவருக்கு திருப்தி ஏற்பட்டிருப்ப தாகத் தெரியவில்லை. அதனால் நிலைத்து நிற்கும் மீள் நல்லிணக்க முயற்சிகளை வேகப்படுத்துங்கள் என்று குறிப்பிட்டார்.

காணாமற் போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள்- அவர்கள் காணாமற் போனமை அல்லது தொலைந்து போனமைக்கான பொறுப்புக் கூறல் இல்லையென்றால் நிலையான மீள் இணக்கம் ஏற்பட முடியாது. இவைகள் பற்றிய முழு விவரங்களும் தெரிந் தால் மட்டுமே மனப்புண்கள் ஆறுவதும் மன்னிக் கப்படுவதும் சாத்தியமாகும் என்று கூறினார் கமலேஷ் சர்மா. வடக்கு மாகாணத்தில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை தேவைகள் தொடர்பாக அரசு எடுத்துவரும் முயற்சிகளை பாராட்டிய அவர் அதேபோல் அந்தப் பகுதி மக்களுக்கு அதிகாரம் வழங்குவது முக்கியம். அவர்களின் நியாயப்பூர்வமான கவலைகளை நிவர்த்தி செய்ய அம்மக்களின் தலைவர்களுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும் என்றார்.

வடமாகாணத்தில் குடிமக்களின் தினசரி வாழ்வியலிலும் சட்டபூர்வமாக அப்பகுதிக்கு பயணம் செய்பவர்கள் மீதும் கட்டுப்பாடுகளும் கண்காணிப்புகளும் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி தலைவர்கள் கொண்டிருக்கும் கவலைகளைத் தீர்த்துக் கொள்ள உதவுவதும் மிக முக்கியம் என்றார். கமலேஷ் சர்மா இன்னொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிடத் தவறவில்லை. மாகாணத்தின் மக்கள் வாழ்வில் இராணுவத்தின் பாதுகாப்பு பங்களிப்பைத் தொடர்ந்து குறைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகை தந்ததும் பல்வேறு இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டு பல்வேறுபட்ட முக்கிய தலைவர்களையும் பிரமுகர்களையும் சந்தித்துவிட்டு சென்றமையை சாதாரண விடயமாக கருத முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணையொன்று போர்க்குற்றங்கள் தொடர்பாக நடைபெற்று வரும் நிலையில் இலங்கை இன்றைய நிலை குறித்து அவர் பொதுநலவாய அமைப்புக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் தமது விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்க முடியும்.

காணாமற் போனவர்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் விசாரணை ஆணைக்குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டிருப்பது பற்றியும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிடுவார் என்று கூறத் தேவையில்லை என்றாலும் அவர் புறப்படுமுன் வெளியிட்டுள்ள கருத்துகள் போருக்குப் பின்னர் அரசின் நல்லிணக்க செயற்பாடுகளில் அவர் பூரண திருப்தியடையவில்லை என்பது புலப்படுகின்றது. அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களை இலங்கை அரசுத் தலை வர்களிடமும் அவர் எடுத்துக் கூறாமல் இருந்திருக்க மாட்டார்.

எனவே பொதுநலவாய அமைப்பின் அடுத்த கூட்டமொன்றில் இந்த விடயங்கள் விரிவாக ஆராயப்படுவது சாத்தியம். அதற்கு முன் அரசு சுதாகரித்துக் கொண்டு செயல்பட்டால் அதன் புகழை பொதுநலவாய அமைப்பில் தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாய் இருக்கும் என்பதைச் சொல்லி வைப்போம்.

# சாவா வாழ்வா நிலையில் நாட்டின் எதிர்க்கட்சிகள்

சேரலாதன்

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவா? அல்லது பொது வேட்பாளர் ஒருவரா? களம் இறங்கப் போகின்றனர் என்பதற்கான தெளிவான அறிகுறிகள் இதுவரை தென்படவில்லை. ரணில் விக்கிரமசிங்காவே போட்டியிடுவாரென அவரது கட்சியினரும், இல்லை இல்லை பொது வேட்பாளர் ஒருவரே களத்தில் இறக்கப்படுவாரென வேறொரு தரப்பினரும் கூறிவருவதைக் காண முடிகின்றது. இந்தத் தடுமாற்றம் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் போட்டியிடப் போகும் மஹிந்தரின் வெற்றி வாய்ப்பை பிரகாசமானதொரு நிலைக்கு இட்டுச் செல்லவே உதவப்போகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வகையிலாவது வெற்றி பெற்றே தீரவேண்டும் என்பதில் தற்போதைய ஜனாதிபதி குறியாக இருக்கின்றார். அதற்கான தேவைகளும் அவருக்கு நிறையவே உண்டு. இந்த நிலையில் அவரது வெற்றியை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளும் தரப்பினர் எதைச் செய்வதற்கும் தயங்க மாட்டார்கள்.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட மஹிந்த பாலசூரிய ஜனாதிபதிக்கு மிக நெருக்கியவரெனக் கூறப்படுகின்றார். இவர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஏழு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய பொலிஸ் அதிகாரிகளிடம் அதிகாரத்தை வழங்குவதற்கும் ஏனையவர்களை அதிகாரம் இல்லாத பதவிகளுக்கு இடமாற்றுவதற்குமான ஓர் ஆரம்ப நடவடிக்கையாகவே இதைப் பார்க்க முடிகின்றது. மூன்று பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கே தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சில முக்கிய பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலின்போது அரச தரப்பினருக்குச் சாதகமானதொரு நிலையை உருவாக்குவதற்காகவே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 24ஆம் திகதி நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துப் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு, முதியவர்களுக்கான கொடுப்பனவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டமை, அரச அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம், அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல், முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவில் அதிகரிப்பு, அதிகரித்த விலையில்

> **ஜனாதிபதித் தேர்தலில் எந்த வகையிலாவது வெற்றி பெற்றே தீரவேண்டும் என்பதில் தற் போதைய ஜனாதிபதி குறியாக இருக்கின்றார். அதற்கான தேவை களும் அவருக்கு நிறையவே உண்டு. இந்த நிலையில் அவரது வெற்றியை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளும் தரப்பினர் எதைச் செய்வதற்கும் தயங்க மாட்டார்கள்.**

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு, உர மானியத்தில் அதிகரிப்பு, நீர்வரி, சமையல் எரிவாயு, மின்சாரக் கட்டணம் ஆகியனவற்றில் குறைப்பு. இவ்வாறு வேறும் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான மேலதிக செலவினங்களை அரசு எவ்வாறு சமாளிக்கப் போகின்றது என்பது கேள்விக்குறியாக உள்ள போதிலும், இதனையிட்டு ஆளும் தரப்பு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தேர்தல் வெற்றி ஒன்றே அதன் ஒரே குறிக்கோளாக மாறி விட்டது. இந்த நிலையில் எதிரணியினர் செயல் இழந்து தம்முள் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வார்களாயின் மஹிந்தரின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிடும்.

சில மாதங்களுக்கு முன்னர் எதிரணியின் சார்பில் நிறுத்தப்படவிருக்கும் பொது வேட்பாளர் தொடர்பான செய்திகள் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தன. உயர் நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவின் பெயர் இதில் முக்கிய இடம் வகித்தது. மஹிந்தரை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு இவரே மிகப் பொருத்தமானவரெனப் பலரும் அபிப்பிரா யம் தெரிவித்தனர். ஆனால் தற்போது அவரைப் பற்றி எவருமே கதைப்பதாகத் தெரியவில்லை. மாறாக ரணில் விக்கிர மசிங்காவே ஜனாதிபதி வேட்பாளர் என ஐக்கிய தேசியக் கட்சியினர் தன்னிச்சையான அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளனர். இதற்கு ஜே.வி.பி. தரப்பிலிருந்து உடனடியாகவே மறுப்பு வெளியிடப்பட்டது. ரணிலைத் தாம் ஆத ரிக்கப்போவதில்லையென ஜே.வி.பி.தலைவர் அநுர குமார திஸநாயக்கா அறிவித்துள்ளார். இடதுசாரிகளும் இவ்வாறே நடந்து கொள்வார்களென எதிர்பார்க்க முடியும்.

மலையகத்தின் முக்கியமான அரசியல் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் ஜனாதிபதிக்கே ஆதரவு வழங்குவார்கள் என்பது தெளிவாகிவிட்டது. ஆனால் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அதிகளவில் பிரதிநிதித்து வப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது தொடர்பாக இதுவரை எந்த முடிவையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அரசியல் களத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து இறுதிநேரத்தில் இவர்கள் முடிவை எடுக்கலாமென்ற எதிர்பார்ப்பு நிலவி வருகின்றது. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களின் வாக்கு கள் ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை மாற்றிவிடக் கூடிய வல்லமை கொண்டவை என்பதை மறுக்கவும் முடியாது.

இந்த நிலையில் மஹிந்தரைத் தோற்கடிக்க வேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் இணைந்து கொள்ளவேண்டும். தம்மிடையே காணப்படும் சித்தாந்த பேதங்களையும், வேறுபாடுகளையும் ஒதுக்கி வைக்க வேண்டும். பலமும், அரசியல் தந்திரமும் மிக்க ஒருவருடன் மோதி வெற்றி பெறுவது என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அதிலும் சகல தரப்பின் ஆதரவையும் திரட்டக்கூடிய வல்லமை பெற்றவர் மஹிந்தர் என்ற உண்மையையும் எதிர்க்கட்சிகள் மறந்து விடலாகாது. இவரை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டுமாயின் ஆளுமையும், மக்களின் அபிமானத்தைப் பெற்றவருமாகிய ஒருவர் எதிர்க்கட்சிகளின் சார்பாக நிறுத்தப்படல் வேண்டும். இதைவிடுத்து பெரிய கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி முரண்டு பிடிக்குமானால் தோல்வி நிச்சயமாகிவிடும்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் பழைய குப்பைகளைக் கிளறிக் கொண்டிருப்பதை விடுத்து ஆக்கபூர்வமாகச் செயற்படவேண்டும். உணர்வுபூர்வமான விடயங்களில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ சிறுபான்மையினரின் ஆதரவையும் பெற்றுத் தானாக வேண்டும். கடந்த காலங்களைப் போன்று இனவாதம் பேசிப் பேசியே எதனையும் சாதித்துவிட முடியாது.

எதிர்க்கட்சிகள் என்று கூறும்போது ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதும், 13ஆவது அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மாகாணசபைகள் அமைக்கப்பட்டதும் அந்தக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றன. ஆனால், அதிகாரங்கள் வழங்கப்படாமையால் மாகாண சபைகள் பெயரளவுக்கு மட்டுமே இயங்கி வருகின்றன. அதிலும் வடக்கு மாகாணசபையின் நிலை பரிதாபகரமான கட்டத்தை எட்டியுள்ளது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன், ஆளுநரே சகல நிர்வாகத்தையும் தமது பொறுப்பில் எடுத்து வைத்துள்ளார். இதனால் மாகாண சபை தெரிவு செய்யப்பட்டு ஒருவருடம் கழிந்த நிலையிலும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் முடங்கிய நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பாக ஜனாதிபதி வடக்கு மாகாண முதலமைச்சருக்குச் சில வாக்கு றுதிகளை வழங்கிய போதிலும், அவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைகள் சுதந்திரமான வகையில் இயங்கும் வகையில் அவற்றுக்கு அதிகாரம் வழங்கப்படுமென்ற உறுதிமொழியை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக வழங்க வேண்டும். இதுவும் சிறுபான்மையின மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க உதவும்.

ஆகவே எதிரணியினர் சகல சாதகபாதகங்களையும் எடைபோட்டு புதிய வியூகங்களை வகுத்துச் செயற்பட வேண்டியதொரு காலகட்டத்தில் உள்ளனர். மஹிந்தரை வீழ்த்துவது சுலபமானதொரு காரியமல்ல என்பது அனைவரும் தெரிந்த ஒன்றுதான் - என்ற போதிலும், அவர் வீழ்த்த முடியாதவர் என்பதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இதுவொரு கடைசிச் சந்தர்ப்பமாக அமைந்துள்ளதால் சாவா! வாழ்வா! என்றொரு நிலையில் உள்ளதையும் எதிரணியினர் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

# முதுகு வளைந்த நிலையில் இன்றைய மஹிந்த அரசு

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீ.எஸ்.ரீ.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்த நன்மையும் கிடையாது. அதற்குக் காரணமுண்டு. வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட சில மாதங்கள் இருக்கையில் பொருள்களின் விலைகள் அதிகரிக் கப்படும். பின்னர் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பொருள்களின் விலை சிறு தொகையால் குறைக்கப்படும். இது தான் காட்டப் படும் வித்தை. இதனை நாட்டின் பொதுமக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் ஆட்சியின் கடைசி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து 1993 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் 11 ஆம் திகதியன்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மஹிந்த தெரிவித்த கருத்துக்களே இவை.

**நிவாரண சலுகைகளுடன் சிறிமாவோ அரசின் வரவு - செலவுத் திட்டம்**

தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு முன்னர் பல சலுகைகளையும், நிவாரணங்களையும் உள்ளடக்கி வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த முதலாவது ஆள் ஜனாதிபதி மஹிந்த அல்ல. 1970-77 கூட்டு முன்னணி அரசின் ஆட்சியில் அப்போதைய பிரதமர் சிறிமாவோவால் அத்தகைய வித்த்திலான வரவு செலவுத் திட்டமே சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த வேளையில் மஹிந்த இளம் நாடாளு மன்ற உறுப்பினராக அரச தரப்பில் செயற்பட்டு வந்தார். 1977 இல் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலான வரவு செலவுத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசிய தேவை சிறிமாவோ வுக்கு ஏற்பட்டிருந்தது. அந்த வேளையில் கூட்டு முன்னணி அரசில் நிதி அமைச்சராக விருந்த என்.எம். பெரேரா பதவியிலிருந்து விலக்கப்பட்டு அந்தப் பதவி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியுறுமென விமர்சிக்கப்பட்டு வந்த அந்த வேளையில், தேர்தலில் சுதந்திரக் கட்சியை வெற்றிபெற வைக்கும் வகையிலான வரவு செலவுத் திட்டமொன்றை தயா ரித்து வழங்குவதாக பீலிஸ் டயஸ் சிறிமாவுக்கு நம்பிக்கையூட்டினார்.

அந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபாவின் பெறுமதியை உயர்த்தி, அதே சமயம் பொது மக் களது அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலையைக் குறைக்கும் முடிவை பீலிக்ஸ் டயஸ் செயற்படுத்தினார். நாட்டின் பொருளாதார நிலை திருப்திகரமானதாக இருந்த தென்பது அதன் அர்த்தமல்ல. உண்மையில் தேர்தல் வேளையில் பொது மக்களை ஏமாற்றி அவர்களது வாக்குகளை வேட்டையாடும் உள்நோக்கம் கொண்டதே பீலிக்ஸ் டயஸின் அந்த முடிவாகும். அந்த வேளையில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய தால், அது தேர்தலில் அரசின் வெற்றிக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடுமென கணக்கிட்ட பீலிக்ஸ் டயஸ், அதுவரை காலமும் வெளி நாடுகளில் இருந்து துணிவகை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளையும் நீக்கியதன் மூலம், வர்த் தக சந்தையில் பொருள்களைப் பெருமள வில் விற்பனை செய்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் நாடு பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெற்றுள்ள தானதொரு தோற்றத்தை ஏற்படுத்தி வைத்தார். அந்த நிலை பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமென பலரால் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும், இலங்கை மக்கள் அத் தனை தூரம் மடையர்கள் அல்ல என ஜே.ஆர்.தெரிவித்திருந்தார்.

ரூபாயின் மதிப்பை உயர்த்தி, நாட்டு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிய போதிலும், சிறிமாவோவின் தலைமையிலான அந்த அரசு 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் படுதோல்வியுற நேர்ந்தது. சிறிமாவோ வுக்கு எதிர்க்கட்சித் தலைவியாகக் கூட ஆக முடியாது போனதுடன், அவ்வேளையில் இளம் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த மஹிந்தவும் அப்பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. மஹிந்தவுக்கு அன்றைய இந்த வரலாறு இன்று நினைவில் இருக்குமோ தெரியவில்லை.

**டி.பி.விஜேதுங்க அரசின் வரவு -செலவுத்திட்டமும் தேர்தல் வெற்றி எதிர்பார்ப்பும்**

அதேபோன்று 1994ஆம் ஆண்டில் இடம் பெற்ற தென் மாகாண சபைக்கான தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, தன்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்டு பொதுத் தேர் தலை நடத்தத் தீர்மானித்த வேளையிலும், 1994ஆம் ஆண்டின் மே தினத்தையொட்டி பொது மக்களுக்கான நிவாரண அறிவிப்பை விடுத்தார். அந்த வேளையில் மஹிந்த சுதந்திரக் கட்சியின் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டு வந்தார். மின் கட்டணக் குறைப்பு உட்பட பல நிவாரணங் களை டி.பி.விஜேதுங்க மே தினத்தன்று பிரகடனப்படுத்தியதற்குக் காரணம் பொதுத் தேர்தலையண்டி அவற்றை அறிவித்தால், பொதுத் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கிலேயே அவை மேற்கொள்ளப்படுவதாக விமர்சிக்கப்படும் என்ற அச்சம் காரணமாகவே. ஆனால் டி.பி.விஜேதுங்கவின் அந்த உத்தி யும் பயன்தரக் தவறியது. 1994 ஜூலை மாதத் தில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலின் டி.பி.விஜேதுங்கவின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு படுதோல்வி கண்டது. உண்மையில் தேர்தலைக் குறிவைத்தே அந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டதாகக் கருதிய வாக்காளர் கள் 17 ஆண்டுகள் காலமாக ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த ஐ.தே.கட்சி அரசைப் படுதோல்வியுறச் செய்தனர்.

**நிவாரணப் பொதியுடன் கூடிய சந்திரிகா அரசின் வரவு செலவுத் திட்டம்**

பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மீன்பிடித்துறை அமைச்சராக அங்கம் வகித்த சந்திரிகாவின் அரசு, 2001 ஆம் ஆண்டில் எதிர்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோற்கடிக்கப்படக் கூடுமென்ற அச்சத்தில் நாடாளுமன்றத்தை கலைத்துப் பொதுத் தேர்த[illegible]ன்றுக்கு உத்தரவிட்ட ச[illegible]த்திலும் நாட்டு மக்களுக்க[illegible] நிவாரணப் பொதியொன்[illegible] வழங்கியது. அரச ஊழி[illegible]ள் மற்றும் ஓய்வூதியர்க[illegible]கான விசேட கொடுப்பன[illegible]ட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான இறக்குமதி வரிக் குறைப்பு மற்றும் எரிபொருள்களுக்கான விலைக்குறைப்பு உட்பட பல தரப்பட்ட நிவார ணங்கள் அறிவிக்கப்பட்டன. இருந்த போதிலும் சந்திரிகாவின் தலைமையிலான அரசு அந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. மஹிந்தவின் பொறுப்பில் விடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

நாட்டு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியும் கூட தேர்தலில் தோல்வியைத் தழுவ நேர்ந்த இந்த வரலாற்றுச் சம்பவங்களை நன்கு தெரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவ தற்குத் தயாராகுவதோடு அதற்கு முன்னர் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிவார ணங்களை வழங்க முயல்வ தேன்? என்பது குறித்து எதையும் ஊகிக்க இயலாதுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலிலும் மஹிந்த அரசு உலருணவுப் பொதிகளை நிவாரணமாக வழங்கி அதனூடாக தேர்தலில் வெற்றிபெறும் உத்தியைக் கையாண்டது. ஆனால் தேர்தலை யண்டி வழங்கப்படும் நிவாரண உதவிகள் வாக்காளர் மத்தியில் சந்தேகத்தையே ஏற் படுத்தக் காரணமாகின்றது. உண்மையில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசு எதிர்பார்த்த பெரு வெற்றியை ஊவா மாகாண மக்கள் பெற்றுக் கொடுக்கவில்லை. ஊவா மாகாண சபைத் தேர்தலில் வெற்றி குறித்து நம்பிக்கை வைத்திராத அரசு எரிபொருள்களின் விலைகளில் கூட குறைப்பை ஏற்படுத்திப் பார்த்தது. ஆனால் ஊவா தேர்தலில் அரசு எதிர்பார்த்த வகையில் முடிவுகள் அமைய வில்லை. உண்மையில் சொல் வதானால் ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவால் அரசு ஸ்தம்பித்துப் போக நேர்ந்துள் ளது.

இதனால்தானா ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக கூட அரசு நாட்டு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி தேர்தல் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முயல்கிறது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

அது குறித்து எதனையும் தீர்க்கமாகக் கூற இயலவில்லை. ஆனால் ஒன்று; இவ்வளவு காலமும் நாட்டின் பொதுமக் களது சிரமங்கள் குறித்து அக் கறை காட்டாத அரசு, இருந்தாற் போலிருந்து எம் மீது ஏன் இத்தனை பாசம் காட்ட முயல்கிறது என நர்ட்டு மக்கள் எண்ணத் தலைப்பட்டால், கிடைப்பதை இழப்பானேன் எனக் கருதி அரசு வழங்கும் சகல நிவாரணங்களையும் பெற்றுக் கொண்டு, தேர்தலின்போது அரசின் நம்பிக்கையைத் தலைகீழாக மாற்றும் வகையில் எதிரணிக் கட்சிக்கு வாக்களிக்க முயலக் கூடும் எனக் கொண்டாலும் அதில் தவறு காண இயலாது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளரொருவர் கூறிய கருத்து இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

'நீல நிறச் சட்டை அணிந்து சென்று உலருணவுப் பொதி நிவாரணம் பெற்றுக் கொண்ட பலர், அன்று மாலை இடம் பெற்ற ஐ.தே.கட் சியின் பரப்புரைக் கூட்டத்துக்குப் பச்சை நிறச் சட்டை அணிந்த நிலையில் உற்சாகமாகக் கலந்து கொண்டதை எனது கண்களால் நேரிடையாகவே நான் கண்டேன்' என்பது அந்த ஊடகவியலாளர் தெரிவித்த செய்தி.

கசப்பாக இருந்தபோ லும், இது மஹிந்த அறிந்திராததொரு உண்மையே.









"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

## ஏழைகள் வீட்டிலும் அடுப்பு எரியட்டும்

செல்வராசா

தினமும் நான் சென்றுவரும் வீதியிலொரு விறகுகாலை. ஒரு காலை வேளையில் ஒரு 'லொறி லோட்' மரக்குற்றிகள் கொண்டுவந்து இறக்கப்பட்டன. அவை கொத்திப் பிளக்கப்பட்டு, விறகுகளாயின. 'லான்ட் மாஸ்ரர்' வாகனங்களிலும், வேறு முறைகளிலும் அவை வெளியேறிக்கொண்டேயிருந்தன. அடுத்த வாரமளவில் அவ்வளவு விறகுகளும் காலி. கொத்தப்பட்ட துகள்கள் மட்டும் வெளியே வீதியில் கொண்டு வந்து கொட்டப்பட்டிருந்தன. அவை ஒரு 'லான்ட் மாஸ்ரர் லோட்' தேறும்.

மீண்டும் அடுத்த வாரமளவில் மேலும் ஒரு 'லொறி லோட்' மரக்குற்றிகள் வந்திறங்கின. அவையும் ஒரு வாரத்தில் விற்றுத் தீர்ந்துவிடும். இவ்வாறு நாடு பூராகவும் எத்தனை விறகு காலைகள், எத்தனை 'லொறி லோட்' மரக் குற்றிகள் ஒரு வாரத்தில் விற்றுத்தீர்ந்து விடுகின்றன. கேள்வி என்னவென்றால், 'இதேயளவான மரக் குற்றிகள் ஒரு வாரத்தில் உற்பத்தியாகின்றனவா? என்பதேயாகும்'. தம்மைப்பற்றியும், தமது எதிர்காலம் பற்றியும், எதிர்காலச் சந் ததி பற்றியும் பிரக்ஞை பூர்வமான சிந்தனை உள்ளவர்கள் ஒரு கணமேனும் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். சிந்திப்பார்களா?

இந்தப் பேரழிவினைக் குறைப்பதற்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு வாரத்துக்கு எவ்வளவு விறகு கொள்வனவு செய்யமுடியும் என்பதனைத் தீர்மானித்து, அதற்கேற்ப ஒவ்வொரு குடும் பத்துக்கும் அங்கத்தவர் தொகைக்கமைய வரையறுக்கப்பட்ட அளவு விறகு, தற்போதைய விலையில் கூப்பனுக்கு விற்கப்பட வேண்டும். அவ்வரையறைக்கு மேலாகத் தேவைப்படுபவர்களுக்கு விசேட அனுமதி மூலம் ஒரு கிலோ விறகு தற்போதைய விலையிலும் பத்து மடங்கு விலையில் விற்கப்படவேண்டும். அந்த மேலதிக வருமானம் மரங்கள் மீள் நடுகைக்கு ஒதுக்கப்பட வேண்டும். ஏழைகளிடமிருந்து அந்தக் கூப்பன் களைக் கொள்வனவு செய்பவர்கள் இருக்கத்தான் செய்வர். அதன் மூலமாவது ஏழைகள் வீட்டில் அடுப்பு எரியட்டும்.



மரம் நடுகை மாதம்

### இது ஒரு கணக்கு

பவிஸனின் முதலாவது பிறந்த நாளுக்கு அவரின் தாத்தா ஒரு தென்னம்பிள்ளை நாட்டார்.

இரண்டாவது பிறந்த நாளுக்கு இரண்டு தென்னம்பிள்ளைகள் நாட்டார்.

இவ்வாறே ஐந்தாவது பிறந்தநாளின்போது எத்தனை தென்னம்பிள்ளைகள் நடப்பட்டிருக்கும்.

ஒரு தென்னம்பிள்ளை 5 வருடங்களில் காய்க்கத் தொடங்குமென்றால் பவிஸன் தாம் ஐந்து புலமைப் பரிசில் தேர்வுகுத் தோற்றும்போது எத்தனை தென்னை மரங்கள் காய்க்கத் தொடங்கியிருக்கும்?

# சாகும்வரை காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு ஆரம்பம்

நாகை மீனவர்களால்



நாகை, நவ.3
இலங்கை நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்களை மீட்க வலியுறுத்தி நாகை மீனவர்கள் நேற்று தொடக்கம் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாகை மாவட்டத்திலுள்ள 54 மீனவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் நேற்று கடலுக்குச் செல்லவில்லை. இதனால் நாள் ஒன்று 2 கோடி ரூபா வரை வர்த்தக இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. மேலும், மீன்பிடித் தொழிலோடு தொடர்புடைய ஐஸ்கட்டி தயாரித்தல், லொறி போக்குவரத்தும் மீனவர்களின் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

நாகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 6 மாவட்ட மீனவர்களின் கூட்டத்தில் 6ஆம் திகதி தொடக்கம் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களை யும், இலங்கையால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 82 படகுகளையும் மீட்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (வ)

## தமிழக காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்றார் ஈ.வி.கே.எஸ்.



ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்

சென்னை, நவ.3
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அடையாள அட்டையில் காமராஜர் மற்றும் ஜி.கே.மூப்பனார் படங்களை பிரசுரிப்பது தொடர்பான கருத்து வேறுபாட்டின் காரணமாக தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த ஞானதேசிகன் கடந்த இரு தினங்களுக்கு முன் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அதையடுத்து, தமிழக காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை, அந்தக் கட்சி மேலிடம் நியமித்தது.

இந்தநிலையில், தமிழக காங்கிரஸ் புதிய தலைவராக ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் நேற்றுக் காலை பொறுப்பேற்றுக்கொண்டார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற இந்த விழாவில் முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், திருநாவுக்கரசர், குமரி அனந்தன், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். (வ)

# தனிக்கட்சி ஆரம்பிக்கிறார் வாசன் அது குறித்து இன்று அறிவிப்பார்



சென்னை, ஒக்.3
தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஜி.கே. வாசன் தனிக்கட்சி ஆரம்பிப்பது உறுதியாகி விட்டதாகவே அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கும் நிலையில், தமது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று அறிவிக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஞானதேசிகன் ராஜினாமாவைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள், தொண்டர் களுடன் முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார். அடுத்தகட்ட நடவடிக்கை குறித்த முடிவை நாளை அறிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது அலுவலகத்தில் செய்தியாளர்களை ஜி.கே.வாசன் நேற்று சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அகில இந்திய காங்கிரஸ் தலைமை, தொடர்ந்து சில ஆண்டுகளாகவே தமிழக காங்கிரஸ் தொண்டர்களின் மனநிலைக்கு மாறாக செயற்பட்டு வருகிறது. கட்சி பிரச்சினையாக இருந்தாலும், தமிழக மக்களின் முக்கிய பிரச்சினைகளாக இருந்தாலும் அவற்றைகாங்கிரஸ்தலைமை சரியாக அணுகவில்லை. இதை பலமுறை எடுத்துச் சொல்லியும் இயக்கத்தை வலுப்படுத்தக்கூடிய பதில் வரவில்லை.

மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் கடந்த 5 மாதங்களாக தமிழக காங்கிரஸ் மீது கட்சி மேலிடம் பாராமுகமாக இருந்ததன் விளைவு இயக்கம் மேலும் வலுவற்றதாக ஆகிவிட்டது. இதற்கெல்லாம் மேலாக உறுப்பினர் அட்டையில் காமராஜர் மற்றும் மூப்பனார் படத்தைப் போட வேண்டுமா,வேண்டாமாஎன்ற சர்ச்சை கிளம்பியபோதே, தொண்டர்களின் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. இது மறைந்த தமிழக தலைவர்களின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனடிப்படையில்தான் தமிழக காங்கிரஸ் தலைவர் மற்றும் பொருளாளர் ராஜி னாமா செய்தனர். இது போன்ற அசாதாரண சூழலுக்குப் பின்னர் உறுப்பினர் அட்டை தொடர்பாக அகில இந்திய தலைமை மறுப்பு தெரிவிப்பது ஏற்புடையதல்ல. கட்சியில் சில முக்கிய தலை வர்களின் தவறான அரசியல் அணுகுமுறை வேதனை அளிக்கிறது.

தமிழகம் முழுவதும் முக்கிய தலைவர்களைச் சந்தித்து கருத்துகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். தொண்டர்கள் என்னைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர். இனி வரும்காலங்களில் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில்வளமானதமிழகம்; வலிமையான பாரதம் அமைக்கப்பாடுபடுவோம். அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று அறிவிப்போம். இவ்வாறு ஜி.கே.வாசன் கூறினார். (வ)

# மரண அறிவித்தல்



## திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை

யாழ்.மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை (01.11.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியதாஸ் (கிளி), றீற்ரா, பொன்றோஸ், ராணி, மதுரம், சிறி, கொலின், சூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, காலஞ்சென்ற யேசுரட்ணம் மற்றும் செல்வம், இராக்கினி, லோகநாதன், யொய்சி, இஸ்ரெலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சூரி (மகன்)

பழைய சந்தை வீதி,
மாதகல்.

AM பேக்ஹவுஸ்
021 221 1810 /077 676 1363

(03770)(4.3.6)

## நேபாளத்தில் பஸ்கள் மோதல் 10 பேர் சாவு: 30 பேர் காயம்

காத்மாண்டு,நவ.3
நேபாளத்தின் மத்திய பகுதியில் இரண்டு பயணிகள் பஸ்கள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் மோதியதில் ஒரு ரஷ்ய பெண் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டில் இருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாக்வான்பூர் மாவட்டத்தின் பாசாமதி பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்து நடைபெற்றது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்களில் 12 பேர் அருகில் உள்ள பரத்பூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அங்குள்ள இணையத்தள செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந்த விபத்தில், தரியா மோஜ்க்வா என்ற ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பெண்ணும் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பஸ்களில் ஒன்றின் சாரதி அதி வேகத்தில் பஸ்ஸை ஓட்டி வந்தது தான் விபத்துக்கு காரணம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (வ)



## சோதனையில் அமெ.தனியார் விண்கலம் வெடித்துச் சிதறியது



வொஷிங்டன், நவ.3
விண்வெளிச் சுற்றுலாவுக்கு பயன்படும் அமெரிக்காவின் தனியார் விண்கலம் ஒன்று சோதனையின்போது நடு வானில் வெடித்துச் சிதறியது. இதில் ஒரு விமானி உயிரிழந்தார். மற்றொருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வர்ஜின் கேலண்டிக் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விண்கலத்தின் பெயர் ஸ்பேஸ் ஷிப் டூ. கலிபோர்னியாவில் உள்ள மோஜவ் ஏவுதளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற இரண்டாவது நிமிடத்தில், விண்கலமும் ரொக்கெட்டும் தனித் தனியே பிரியும்போது விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விண்கலம் வெடித்துச் சிதறியபோது, ஒரு விமானி தரையில் வந்து விழுந்ததாகவும் மற்றொருவர் பரசூட் மூலம் தப்பிக்க முயன்றதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இந்த விண்கலத்தின் மூலம் பொது மக்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்துச் செல்லும் முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வர்ஜின் கேலண்டிக் நிறுவனம் திட்டமிட்டிருந்தது. இந்த நிலையில், விண்கலம் வெடித்துச் சிதறியிருப்பதால் விண்வெளி சுற்றுலாத் திட்டத்துக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. எனினும், தங்களது திட்டத்தை தொடர விரும்புவதாக வர்ஜின் கேலண்டிக் நிறுவனத்தின் தலைவர் ரிச்சர்ட் பிரான்சன் தெரிவித்துள்ளார். ஸ்பேஸ் ஷிப் டூ ஏற்கனவே பல முறை இந்த விண்கலம் சோதனை செய்யப்பட்டிருந்தாலும், தற்போது புதுமையான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. (வ)

# கடத்திய மாணவிகள் 219 பேருக்கு திருமணம்

### சமாதான ஒப்பந்தத்தை நிராகரித்த போகோ ஹராம்




கெனோ, நவ.3
போகோ ஹராம் அமைப்பால் கடத்தப்பட்ட 219 மாணவிகளுக்கு திருமணமானதாக வெளிவந்த திடீர் அறிவிப்பால் அந்த அமைப்புடனான சமாதான ஒப்பந்தத்தை நிராகரித்து நைஜீரிய அரசு.

நைஜீரியாவில் சிபோக் நகரில் கடந்த ஏப்ரல் மாதம் பாடசாலை மாணவிகளை போகோஹராம் தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர். இதில் சிலர் தப்பி வந்த நிலையில் தற் போது 219 மாணவிகள் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ளனர். இதற்கிடையே கடந்த மாதம் அரசுடன் நடந்த பேச்சில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து தீவிரவாதிகள் போர் நிறுத்தத்துக்கு சம்மதித்து இருப்பதாக நைஜீரிய அரசு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் தீவிரவாதிகள் புதிய காணொலிக் காட்சி ஒன்றை வெளியிட்டு உள்ளனர். அதில் "தீவிரவாதிகளின் தலைவர் ஒருவர் தோன்றி, நாம் அரசுடன் உடன்பாடு மேற்கொள்ளவில்லை. போர் நிறுத்தம் செய்ததாக கூறுவதில் உண்மை இல்லை. எங்களது தாக்குதல் தொடரும். கடத்தப்பட்ட மாணவிகளில் பெரும்பாலானவர்களை மதமாற்றம் செய்துவிட்டோம். நாம் அவர்களை திருமணம் செய்து கொண்டோம். அவர்கள் எங்கள் வீடுகளில் வசிக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள இந்த புதிய காணொலி காட்சியால் நைஜீரியாவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

## தீவிரவாதி என சந்தேகித்த நபரை அடித்துக் கொன்று சாப்பிட்ட மக்கள்

காங்கோவில் தீவிரவாதி என்று சந்தேகப்பட்ட நபர் ஒருவரை பொதுமக்கள் சேர்ந்து அடித்து கொன்றதுடன், சமைத்து சாப்பிட்டுள்ள சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆபிரிக்காவின் காங்கோ நாட்டில் உள்ள கம்பியா சூ என்ற கிராமத்தில் ஏ.டி.எப். என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர்.

இந்தநிலையில் பெனி நகரில் பஸ்ஸில் பயணித்த பொது மக்கள், அவர்களுடன் பயணித்த நபர் ஒருவரின் மீது சந்தேகமடைந்துள்ளனர். எனவே அவனிடம் தங்களது மொழியில் பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கியுள்ளனர். ஆனால் அவன் பதில் ஏதும் கூறவில்லை.

இதனால் அவன் தீவிரவாத குழுவைச் சேர்ந்தவன் என்று நினைத்த மக்கள் அவனை பஸ்ஸிலிருந்து இழுத்து கீழே தள்ளியுள்ளனர். அதன்பின் கல்லால் அடித்து கொன்று, அவனை எரித்ததுடன், அந்த உடலின் சில பாகங்களைச் சாப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையே அடித்து கொல்லப்பட்ட ஜோசப் கபிலா என்ற நபர் தீவிரவாதியா? என பொலிஸ் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (வ)



## உக்ரைன்- ரஷ்யா இடையே எரிவாயு ஒப்பந்தம்



உக்ரைன்-ரஷ்யா இடையேயான எரிவாயு ஒப்பந்தம் கையெழுத்தானது. பெல்ஜியம் தலைநகர் ப்ரசல்ஸில் நடைபெற்ற கூட்டத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னிலையில் உக்ரைன் மற்றும் ரஷ்யா பிரதிநிதிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

உக்ரைனின் கிழக்கு நகரங்களில் கடந்த சில மாதங்களாக நிகழ்ந்து வரும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியை தொடர்ந்து உக்ரைன் - ரஷ்யா உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனை அடுத்து உக்ரைனுக்கு வழங்கி வந்த எரிவாயு விநியோகத்தை ரஷ்யா நிறுத்தியது. இதனை அடுத்து ரஷ்யா மற்றும் உக்ரைன் அரசுகள் இடையே பேச்சுவார்த்தை நடத்திய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மீண்டும் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர். (வ)

## அமைதிக்கான நடவடிக்கையில் தாலிபான்கள் இணைக

### ஆப்கன் ஜனாதிபதி வேண்டுகோள்

சர்வதேச சமூகத்தின் அமைதி நடவடிக்கையில் இணைய தாலிபான்களுக்கு ஆப்கன் ஜனாதிபதி அஷ்ரப் கானி அழைப்பு விடுத்துள்ளார்.

சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற அமைதி மற்றும் மறுக்கட்டமைப்பு மாநாட்டில் ஆப்கன் அதிபர் அஷ்ரப் கானி கலந்து கொண்டு, சர்வதேச அளவில் அமைதியை நிலைநாட்டும் வழிவகைகள் குறித்து பேசினார். அப்போது தனது பேச்சில் தாலிபான்கள் குறித்து குறிப்பிட்டு பேசாத அவர், அங்கிருந்து புறப்பட்டு விமான நிலையம் சென்ற போது செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறுகையில்: அமைதி தான் நாட்டின் முதல் உரிமை. நாங்கள் அனைத்து எதிர்கட்சிகளையும் மற்றும் குறிப்பாக தாலிபான்களை அமைதி பேச்சுக்காக அழைக்கின்றோம். மேலும், சர்வதேச நாடுகள் அனைத்தும் ஆப்கான் வழி நடத்த இருக்கும் அமைதி நடவடிக்கைகளுக்கும் ஆப்கானில் அமைதி நிலவ வேண்டிய நடவடிக்கைக்கும் ஆதரவு அளிக்க வேண்டும்- என்று கேட்டுக்கொண்டார். (வ)

## பக்தாத்தில் தொடர் குண்டு வெடிப்புக்களில் 15 பேர் உயிரிழப்பு



ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு அருகிலுள்ள சந்தைப் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்த் தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புக்களில் 15 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். புறநகர்ப் பகுதியான சுவெயில் உள்ள ஆட்டுச் சந்தையில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 5 பேர் உயிரிழந்தனர். பக்தாத்தின் மற்றோர் புறநகர்ப் பகுதியான ராதவ் நியாவின் கடைவீதியில் நிகழ்த் தப்பட்ட குண்டுவெடிப்பில் இருவரும், அந்த நகருக்கு அருகிலுள்ள மதாயினில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 4 பேரும் உயிரிழந்தனர். பக்தாதுக்கு 20 கி.மீ. தொலைவிலுள்ள யூசிஃபியா நகரில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல்களில் 33 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் எண்ணெய் வளம் நிறைந்த, சன்னி பிரிவினர் அதிகம் வசிக்கும் பீஜி நகரின் முக்கிய பகுதிகளை இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) அமைப்பிடமிருந்து இராணுவம் மீட்டதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (வ)

## நிலவிலிருந்து பூமிக்கு திரும்பிய ஆளில்லா சீன விண்கலம் சாதனை

பீஜிங், நவ.3
நிலவுக்கு சென்று மீண்டும் பூமிக்கு திரும்பும் பெயரிடப்படாத விண்கலத்தை சீனா வெற்றிகரமாக மீண்டும் பூமிக்கு தரையிறக்கி சாதனை படைத்துள்ளது.

சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தச் சாதனையை புரிந்த மூன்றாவது நாடு என்ற பெருமையைச், சீனா பெற்றுள்ளது.

நிலவின் வெளிப்புறத்தை



ஆராய்வதற்காக அங்கு சென்று திரும்பும் வகையில் புதிய வகை விண்கலத்தை கடந்த வெள்ளிக்கிழமை சீனா ஏவியது. இந்த விண்கலம்.8 லட்சத்து 40 ஆயிரம் கி.மீ. தூரம் பயணம் செய்து பூமி மற்றும் நிலவை படமெடுத்து அனுப்பியது.

இந்த நிலையில், இந்த விண்கலம் வெற்றிகரமாக மீண்டும் பூமிக்கு வந்து நேற்று முன்தினம் காலை தரையிறங்கியது. (வ)

# காற்றிலிருந்து குடிதண்ணீர் தரும் கருவி கண்டுபிடிப்பு

ஆபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் குடிதண்ணீருக்கு திண்டாடி வரும் நிலையில் மாற்று ஏற்பாடாக காற்றிலிருந்து குடிதண்ணீர் உற்பத்தி செய்யும் வகையில் சூரிய ஒளியில் செயற்படும் புதிய இயந்திரம் ஒன்றை பிரான்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. மேலும் இந்த இயந்திரம் மூலம் மின்சாரமும் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதிலுள்ள இயந்திரத்தின் மூலம் காற்றில் இருக்கும் ஈரப்பதம் அகற்றப்படுகிறது. பின்னர் நீராவியானது திரவ வடிவமாக மாறி காற்றிலிருந்து நீராகப் பிரிகிறது. அந்த நீர் இயந்திரத்திற்குள் இருக்கும் சிறிய டேங்க் மூலமாகச் சேகரிக்கப்படுகிறது. அதன்பின்னர் இறுதி யாகச் சேகரிக்கப்பட்ட நீர் இதில் பொருத்தப்பட்டுள்ள கருவி மூலம் இரசாயனம் மற்றும் நுண்ணுயிர் கிருமிகள் வடிகட்டப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தை பொறுத்து இந்த இயந்திரம் நாளொன்றுக்கு ஆயிரம் லீற்றருக்கு மேல் உற்பத்தி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் நிறுவனமும் எமிரேட்ஸ் சுற்றுசூழல் அமைப்பும் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருவியை பயன்படுத்துவதற்கென பிரத்தியோக இடம் தெரிவுசெய்யப்பட உள்ளதாகவும் எமிரேட்ஸ் சுற்றுச் சூழல் அமைப்பின் சேர்மன் மேஜர் அல் சக்ர் சல் சுவைதி தெரிவித்துள்ளார்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## கடமையும் சூழ் லையும்

மனித சமுதாயம் என்பது பல படிகளுடன் கூடிய ஓர் அமைப்பாக உள்ளது. நன்னெறியைப்பற்றி நம் எல்லோருக்கும் தெரியும். கடமை என்றால் என்ன என்பதும் நாம் அறிந்ததே. அதேவேளையில் நன்னெறி என்பதன் பொருள் நாட்டுக்கு நாடு பெரிதும் மாறுபட்டிருப்பதையும் நாம் காண்கிறோம். ஒரு நாட்டில் நன்னெறியாகப் போற்றப்படுவது இன்னொரு நாட்டில் மிகவும் இழிந்த செயலாகத் தூற்றப்படுகிறது. ஒரு நாட்டில் மக்கள் ஒருமுறைதான் திருமணம் செய்து கொள்ளலாம். இன்னொரு நாட்டில் பலமுறை திருமணம் செய்யலாம். அனைத்திலுமே அளவுகோல் பெரிதும் தழுவியதான அளவுகோல் ஒன்று இருந்தேயாக வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். கடமையின் விடயமும் இதுதான். அது பற்றிய கருத்தும் நாட்டுக்கு நாடு வெகுவாக வேறுபடுகிறது. ஒரு நாட்டில் ஒருவன் சில காரியங்களைச் செய்யவில்லையென்றால் கடமை தவறியவனாகக் குறை கூறப்படுவான். அதே செயல்களை அவன் வேறொரு நாட்டில் செய்தாலோ அவன் தவறாக நடந்து கொண்டதாகக் குறைகூறப்படுகிறான். எனினும் கடமை பற்றிய உலகம் தழுவிய ஏதாவது கருத்து இருக்க வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். இதுபோலவே சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் சிலவற்றைத் தங்கள் கடமையாகக் கருதுகிறார்கள். அதே நேரத்தில் மற்றொரு பிரிவினர் அது முழுக்கமுழுக்கத் தவறு என்று கருதுகிறார்கள். அத்தகைய செயல்களைச் செய்ய நேருமானால் துடித்துவிடுகிறார்கள். இரு வழிகள். நமக்குத் தென்படுகின்றன ஒன்று அறிவிலிகளின் வழி. உண்மையை அடைய ஒரே வழிதான் உள்ளது. மற்றவை அனைத்தும் தவறு என்று அது கூறுகிறது. மற்றொன்று சான்றோரின் வழி நமது மன அமைப்புக்கும் நான் வாழ்கின்ற நிலைக்கும் ஏற்ப கடமையும் ஒழுக்கமும் மாறலாம் என்று அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். நாம் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கடமை என்பதிலும் ஒழுக்கம் என்பதிலும் படிகள் இருக்கின்றன. வாழ்க்கையின் ஒரு நிலையில், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கடமையாக இருப்பது மற்றொன்றில் அவ்வாறு இருக்காது. இருக்கவும் முடியாது என்பதுதான்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 3 | 2 | | | | 7 | |
| | | 7 | | | | | | 6 |
| 4 | | | | | | | | 1 |
| 8 | | 5 | 3 | 6 | | 7 | | |
| | 6 | | 4 | | 8 | | 9 | |
| | | 1 | | 5 | 7 | 6 | | 2 |
| 1 | | | | | | | | 7 |
| 2 | | | 6 | 7 | | 1 | | |
| | 7 | | | | 9 | 8 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 5 | 8 | 2 | 9 | 6 | 3 | 4 |
| 4 | 9 | 6 | 3 | 1 | 5 | 8 | 2 | 7 |
| 8 | 2 | 3 | 6 | 4 | 7 | 1 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 9 | 7 | 2 | 3 | 6 | 8 |
| 3 | 8 | 2 | 1 | 6 | 4 | 9 | 7 | 5 |
| 6 | 7 | 9 | 5 | 3 | 8 | 4 | 1 | 2 |
| 2 | 3 | 8 | 7 | 9 | 6 | 5 | 4 | 1 |
| 9 | 6 | 7 | 4 | 5 | 1 | 2 | 8 | 3 |
| 1 | 5 | 4 | 2 | 8 | 3 | 7 | 9 | 6 |



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா


**மேடம்**: நெருக்கடியான நிலையில் இருந்தாலும் குடும்பத்தில் மிக நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். எந்தப் பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.


**இடபம்**: காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு.


**மிதுனம்**: சிற்சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். அதேபோல் உறவினர் வகையிலும் அதிக நெருக்கம் வேண்டாம். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டுப்பிரிய நேரிடலாம்.


**கடகம்**: தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. உடன் பணி புரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும்.


**சிங்கம்**: சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பார்த்த புகழ், பாராட்டுக் கிடைக்கும்.


**கன்னி**: பண விடயம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்துப்போக வேண்டியிருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.


**துலாம்**: எந்த வேலையிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைகளை முறியடித்து காரிய வெற்றி பெறலாம். வீடு, நிலம் ஆகியவற்றில் இருந்து வந்த தாமத நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்படும்.


**விருச்சிகம்**: நண்பர்களிடத்தில் மனக்கிலேசம் ஏற்படலாம். எதிர்காலத்திற்குத் தேவையான முறையான சேமிப்புகளுக்குண்டான ஏற்பாடுகளை செய்வீர்கள். எதிரிகளின் இன்னல்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.


**தனுசு**: பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையிருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம்.


**மகரம்**: எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும்.


**கும்பம்**: புதிய வீடு, மனை ஆகியவற்றை வாங்கும் போது கவனம் தேவை. ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர்.


**மீனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த் திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும்.

## நாளை

**ஐப்பசி-18 செவ்வாய்க்கிழமை | 04.11.2014**

திதி: துவாதசி மு.ப.09.15 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மா.06.25 வரை

சுபநேரம்:10.34-12.04 வரை
இராகுகாலம்:03.04-04.34 வரை
பிரதோஷ விரதம்

# முரளிக் கிண்ணம் ஆனந்தா கையில்

## பெண்கள் பிரிவில் சீனிகம தட்டிச் சென்றது





யாழ்ப்பாணம், நவ. 3
கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி வீரர்களின் அதிரடியான பந்துவீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது திணறிய றிச்மன் கல்லூரியை 68 ஓட்டங்களுக்குள் சுருட்டி முரளிக் கிண்ணத்தை தனதாக்கியது கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி.

முரளி நல்லுறவு வெற்றிக் கிண்ணத்திற்கான 19 வயதுப் பிரிவு ஆண்கள் 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று முடிந்துள்ளது. ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. கொழும்பு ஆனந்தாக் கல்லூரியை எதிர்த்து காலி றிச்மன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காலி றிச்மன் கல்லூரி அணி கொழும்பு ஆனந்தாக் கல்லூரி வீரர்களின் அதிரடியான பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது திணறியது. ஓட்டங்கள் குவிக்க முடியாது தடுமாறியது. 18.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. பசிது விம்சா ஆகக் கூடுதலாக 19 ஓட்டங்களை பெற்றார். சகன் ஆரய்ச்சிகே 4பந்துப் பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை வீழ்தினார். கவிக அஞ்சல 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை வீழ்த்தினார்.

69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களமிறங்கிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி ஆரம்ப இலக்குகளை அடுத்தடுத்து இழந்தது. எனினும் அணியின் நடுத்தர வரிசை வீரர்கள் அணியைச் சரிவிலிருந்து தூக்கி நிறுத்தினர். அவர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 16.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவிலேயே இலக்கை அடைந்து வெற்றி பெற்றது. 5 இலக்குகள் வீழ்த்தப்பட்டன. அஞ்சல சிசேர ஆட்டம் இழக்காமல் 39 ஓட்டங்களைப் பெற்றார். பி.டபிள்யு.எச். சில்வா 4 பந்துப் பரிமாற்றங்களில் 6 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை வீழ்த்தனார்.

ஆட்ட நாயகனாக ஆனந்தாக் கல்லூரி அணி வீரன் சரக் அசலங்கவும், தொடர் ஆட்ட நாயகனாக ஆனந்தாக் கல்லூரி அணி வீரன் சண்முகஅசன்கவும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக காலி றிச்மன் கல்லூரி வீரன் கே.ஜ.சி.அசலங்கவும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஆனந்தாக் கல்லூரி வீரன் ஏ.சிகேரகவும் தெரிவானார்கள்.

### பெண்கள் இறுதியாட்டம்

பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் சீனிகம மகளிர் அணியை எதிர்த்து பதுளை மகளிர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுதாடிய சீனிகம மகளிர் அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களை பெற்றது. லங்க தாசினி 26 ஓட்டங்களைப் பெற்றார். பி.எம்.எஸ்.உத்திரா 3 இலக்குகளை வீழ்த்தினார். 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பதுளை மகளிர் அணியினர் 14.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும். இழந்து 45 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. எஸ்.டிசஞ்சல 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், எ.டசுனி அஞ்சலா 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (உ-23)

# மின்னல்வேக கூடைப்பந்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம், நவ. 3
யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பொன் விபுலானந்தன் கிண்ண மின்னல் வேக கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ்சொக்ஸ் விளையாட்டுக் கழகஅணி மோதிக் கொண்டது. 10 நிமிடங்களைக் கொண்ட இரண்டு பாதி ஆட்டங்களாக இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணி அட்டகாசமான வெற்றியைப் பதிவு செய்தது.

சொற்பநேர ஆட்டம் என்பதால் முதல்பாதி இரண்டாம் பாதி என இரு கட்டங்களிலும் ஆட்டத்தில் அனல்பறந்தது. முடிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 : 24 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. சிறந்த வீரனாக சென்ற லைட்ஸ் சொக்ஸ் அணியின் புருசோத்மன் தெரிவானார். (உ-23)

## மைலோ கிண்ண உதைபந்து அடுத்த வாரத்தில் ஆரம்பம்

மைலோ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் யாழ். மாவட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் இடம் பெறவுள்ளது. அடுத்த வாரம் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றிய அணிகளை விட பெரும் அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளன என்று யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 50 அணிகள் போட்டியில் மோதவுள்ளன என்றும் அவர் கூறினார். யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய பிரதேசங்களில் ஆட்டங்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி ஊர்காவற்றுறையில் இடம்பெறும்.

கடந்த வருட மைலோ கிண்ண போட்டியில் திறமையை வெளிக்காட்டிய வீரர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட யாழ். மாவட்ட அணி இந்த முறை தேசிய மட்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பறித்துச் சென்றது. இந்த முறையும் அதே நடைமுறை பின்பற்றப்படும் என்றும் தெரி விக்கப்படுகிறது.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகளுக்கும் வீரர்களுக்கும் சிறப்புப் பரிசில்களும் ஊக்குவிப்புக்களும் வழங்கப் படவுள்ளன. (உ-108)

# கம்பன் கிண்ண இறுதியில் யாழ். 4 ஸ்ரார் - ஒற்றுமை

கரணவாய், நவ.3
கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். 4 ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கம்பர்மலை கம்பன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றன. அணிக்கு 7 பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் கொம்பாந்துறை இளைஞர் வி.கவும் யாழ். 4 ஸ்ரார் வி.கவும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொம்பாந்துறை இளைஞர் அணியினர் மயூரன் அதிரடியாகப் பெற்ற அரைச் சததத்தின் உதவியுடன் 11.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றனர்.

அந்த அணி சார்பாக அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மயூரன் 33 பந்துகளில் 3 ஆறு, 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் கேமபுஸ் 3 இலக்குகளை வீழ்ந்தினார்.

பதிலுக்கு 70 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய யாழ். 4 ஸ்ரார் அணி 11 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. 4 இலக்குகள் வித்தியாசத்தில் வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. தைபு 25 ஓட்டங்களைப் பெற்றார். மயூரன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது அரையிறுதியில் கொக்குவில் பிரம்படி வி.கவும் தொண்டமானாறு ஒன்றுமை வி.கவும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் பிரம்படி அணி எதிரணியின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது இலக்குகளை மளமளவெனப் பறிகொடுத்து 3[illegible] ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. ஈசன் 3 இலக்குகளை வீழ்த்தினார். அடுத்து 3[illegible] என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 7ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே வெற்றி இலக்கை அடைந்தது. 3 இலக்குகளை மட்டும் இழந்தது. இறுதியாட்டத்துக்கும் தகுதி பெற்றது. (உ-10[illegible])



# இந்தியா இலகு வெற்றி




சர்வதேச ஒரு நாள் ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இந்தியஅணியும் சர்வதேச 20 / 20 ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இலங்கை அணியும் இருக்கின்ற நிலையில் சம்பியன்களுக்கிடையிலான தொடர் என வர்ணிக்கப்பட்ட இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டம் நேற்றைய தினம் ஓரிசா மாநிலம் கட்டாக்கில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கைஅணி இந்தியஅணியை துடுப்பெடுத்து ஆடுமாறு பணித்தது. இதன்படி இந்தியஅணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரஹானே மற்றும் தவான் ஆரம்பத்திலிருந்து அதிரடியாக ஆடி இந்திய அணிக்கு சிறந்த தொடக்கத்தை கொடுத்தனர். தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய இவர்கள் இருவரும் சதத்தைப் பூர்த்தி செய்ததுடன் ஆரம்ப இணைப்பாட்டமாக 35வது பந்துப் பரிமாற்றத்தில் 231 ஓட்டங்கள் பெற்ற நிலையிலேயே இந்திய அணியின் முதல் இலக்காக தவான் 113(107) பெற்ற நிலையில் பிரியரஞ்சனவின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ரெய்னாவிற்கு நேற்றைய போட்டி 200வது போட்டியாக அமைய வழக்கம் போல் அதிரடியைக் கையில் எடுத்தார். மறுபக்கம் அணியின் ஓட்டம் 37.5 பந்துப் பரிமாற்றத்தில் 247ஆக இருந்தபோது ரஹானே 111(108) ஓட்டங்களுடன் றன்தீவின் சுழலில் சிக்கினார். தொடர்ந்து அதிரடியாக ஆடிய ரெய்னா 3 ஆறு ஓட்டங்கள் மற்றும் 4 நான்கு ஓட்டங்கள் உட்பட 52(34) ஓட்டங்களுடன் 43.3 பந்துப் பரிமாற்றத்தில் அணியின் ஓட்டம் 299 ஆக இருந்த வேளையில் ஆட்டம் இழந்தார். தொடர்ந்து வந்த கோஹ்லி 22 ஓட்டங்களையும் ராயுடு 27 ஓட்டங்களையும் சகா ஆட்டம் இழக்காது 10 ஓட்டங்களையும் பட்டேல் ஆட்டம் இழக்காது 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட இந்திய அணி 50 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 363 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் இலங்கைஅணி சார்பாக றன்திவ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 78 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும். பிரியரஞ்சன 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு 1இலக்கையும். லகிருகாம்கே 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 59 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர்.

364 ஓட்டங்களைக் பெற்றால் வெற்றி எனும் இமாலய இலக்கை விரட்டுவதற்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கைஅணியின் ஓட்ட எண்ணிக்கை 8.5 பந்துப் பரிமாற்றத்தில் 31 ஆக இருக்கும் பொழுதே டில்சான் 18(22) ஓட்டங்களுடன் யாதேவ் பந்தில் ஏமாற்றினார். இடத்தை மட்டுமே நிரப்புவதற்காக வந்த சங்கா 13.2 பந்துப் பரிமாற்றத்தில் அணியின் ஓட்டம் 61 ஆக இருக்கும் போது 13(21) ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். டெஸ்ட் பாணியில் சற்று நிலைத்து நின்று ஆடிய தரங்க 28(53) ஓட்டங்களுடனும் ஜெயவர்த்தன 43(36) ஓட்டங்களுடனும் வெளியேற இலங்கைஅணியை சோகம் கௌவியது. பிரசன்னா 5(13) மத்தியூஸ் 23(32) பிரியரஞ்சன 12(21) றன்திவ் 5(8) பிரசாத் 0(4) பெரேரா 29(26) ஓட்டங்களுடன் வெளியேற இலங்கைஅணி 39.2 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 194 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 169 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக இசாந்சர்மா 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் பட்டேல் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் யாதவ் 6.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அஸ்வின் றெய்னா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ரகானே தெரிவு செய்யப்பட்டார் (ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி
## பரமணிக்கம் (இன்னேசம்) வைத்தியான்



நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமணிக்கம் (இன்னேசம்) வைத்தியான் 31.10.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவேத்தி மேரி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தொம்மை ஆனாள் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அடைக்கலம் மற்றும் பேதுரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சூசை, மனவேல், செபஸ்தி, அற்புதம், மதலேனாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் றீற்ரம்மா ஜோசேப், அல்வின் அம்மா, அருள் அம்மா, ஜோகராசா, சிறில், அன்ரன் (பிரான்ஸ்), லடிசிலோஸ் (தம்பி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பக்கீரி, மற்றும் பூபதி, காலஞ்சென்ற தவராசா மற்றும் பெரியதம்பி, சின்னப்பிள்ளை, ராசாத்தி, மேனகா (பிரான்ஸ்), ராசாத்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பீற்ரர் மற்றும் ஞானசீலி, அமலன் (பிரான்ஸ்), யசோ (இந்தியா), காலஞ்சென்ற மலர் மற்றும் மேனகா (ஜேர்மனி), ரவி (லண்டன்), ரகு (ஜேர்மனி), ரனி (பிரான்ஸ்), ரனிசா (பிரான்ஸ்), ரகுசா (இத்தாலி), ரலி (பிரான்ஸ்), ரலிதா (பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), யூச்சின், சந்திரன், விசயன், றெமிலா, இந்திரன் (சவூதி), காலஞ்சென்ற சூரியன் மற்றும் ஜெயக்குமார் (கட்டார்), அப்பன், வசந்தன், சுகந்தன், ஜெயந்தன், காலஞ்சென்றவர்களான சாந்தன், றெஜி மற்றும் மஞ்சுளா, வாசுகி (பிரான்ஸ்), பிரான்சிஸ், காலஞ்சென்ற மதன் மற்றும் பிறேமினி (பிரான்ஸ்), பிறேமன் (கொலண்ட்), நிமால், ஜேராணி, வினோ, விஜய், வினோத், வினோதா, அதீசன் (பிரான்ஸ்), அனுசன் (பிரான்ஸ்), அனித்தா (பிரான்ஸ்), றொசாந்தினி (பிரான்ஸ்), ஜொசாறியன் (பிரான்ஸ்), றொனித் (பிரான்ஸ்), நிறோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜேராச்பீற்றர், கிறிஸ்ரி, ஜெறி (பிரான்ஸ்), மஜினா, அனி, அனுசியா, அனுஸ்கரன், கிறிஸ்ரிகா, சசிபன், டிக்சன், டிலக்ஷன், விக்ஷன், டிசாந், டினோஷன், விது, விதுஷன், அபி, அபிஷன், ஜெனிஷா, ஜெயானி, சிந்துச்சா, விதுஷன், அன்பரசி, சுசிந்தன், டெனிற்ரா, டெனிஸ்ரன், வினோஜா, விதுஷன், அபிஷாக், தேனுஷா, தனராஜ், மதுஷா, தனுஷியா, நிகிந்தா, பிரியா, சாணு, அபிஷா, பிறையாளன், கனிமொழி, பூவிழி, வின்சியா (பிரான்ஸ்), சாணுஜா (பிரான்ஸ்), வபிஷா (பிரான்ஸ்), யோபினா, பாணுயன், ஜீவனா, நிறோஜா, நிதுஷா, நிர்மினி, அபிஷன், நிவேதா, அபிஷா, வினோஜன், ஜெனாஸ் (பிரான்ஸ்), டினேஸ் (பிரான்ஸ்), அனிஸ்ரா, அனோஷன், மிகஜேன், அர்விஸ், ஆருஸ், எர்வின், செலினா (ஜேர்மனி), அஸ்வின், ஆரோன், தெபேறா (பிரான்ஸ்), ஜெரோமி, கிறாஸ், நதுஷா, நதுஷன் (இத்தாலி), அரிஸ், அன்ரியா, ஜக்ஷன், ஸ்ரெபான், மெலானி (பிரான்ஸ்), பர்சான், ரிஸ்வான், மகிசா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும், சுபைசன், சுலக்ஷன், சுலோஷன், சுபைதா, கஸ்வின், தனுசிக்கா, ஏஞ்சல், ஆர்த்திஸ், அஸ்மித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புக் கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.11.2014) திங்கட்கிழமை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் பி.ப. 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் இராயப்பர் சின்னப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : அன்ரன் - 0033 147187869 (பிரான்ஸ்), தம்பி - 0033 143812665(பிரான்ஸ்), யோசேப் - 077 578 3513, சிறில் - 077 931 5439, யோகராசா - 077 571 1594

நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறை. www.maranvideo.blogspot.com தகவல்: பிள்ளைகள்

(53776)(7.6)

# கேள்வி விலை கோரல்

**வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி**

மேற்படி சங்கத்தில் அச்சுவேலியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தின் கீழ்க்காணம் 2 ஆம் கட்ட வேலைக்கான கேள்வி விலை கோரல் பொருத்தமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகிறது.

| விபரம் | மீளளிக்கப்படாத பத்திர பணம் | மீளளிக்கும் கேள்வி வைப்பு |
|---|---|---|
| கட்டடத்தின் மின்சார இணைப்பு அலுமினிய வேலைகள் ஆகியன | 100.00 | 1000.00 |
| ஓடுதளம், சுற்றுமதில் என்பன | 200.00 | 2000.00 |

மேற்படி வேலைக்கான விபரங்களைக் கொண்ட விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்று இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி **தலைவர், வலி கிழக்கு, வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி, புத்தூர்** என்ற முகவரிக்கு 22.11.2014 ஆம் திகதிக்கு முன்னர் மூடிய கடித உறையில் இடது பக்க மூலையில் ''கட்டட ஒப்பந்தத்துக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறும் இரண்டாவது பிரதியை **கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகம் கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமைக்காரியாலயத்தில் அலுலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.சந்திரன்
தலைவர்
வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி

(வி/17536)

# மரண அறிவித்தல்



**தம்பியப்பா பரஞ்சோதி (சோதி)**

(ஓய்வு பெற்ற தபால் அதிபர், யோகபுரம், மல்லாவி)

மண்டைதீவு 08 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாவும் தற்பொழுது நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா பரஞ்சோதி சனிக்கிழமை (01.11.2014) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - வேதநாயகி தம்பதியினரின் அருமை மகனும், குணேஸ்வரியின் (குணம், பிரம்மகுமாரி) அன்புக் கணவரும், யசோதரன் (உள்ளூராட்சித் திணைக்களம் , வடமாகாணம்), காலஞ்சென்ற ஜமுனா (பிரம்ம குமாரி, முன்னாள் ஆசிரியை, கொட்டாஞ்சேனை தமிழ் வித்தியாலயம்) மற்றும் பகீரதன் (லண்டன்), சிறீதரன் (கனடா), மிதுனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தில்லை நாயகம் மற்றும் சக்திவேல், தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர் அருணோதயாக்கல்லூரி), காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தெட்சணாமூர்த்தி (முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்) மற்றும் சிதம்பரநாதன் (ஓய்நிலை திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்), காங்கேசபிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், லோஜினி (நிர்வாக அலுவலர், கல்விவலயம், தென்மராட்சி, சாவகச்சேரி), மதுமதி (லண்டன்), வளர்மதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, அன்னலட்சுமி, புஸ்பவதி (பவளம்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தியாகேஸ்வரி, ஜோதீஸ்வரி, ஜெயந்தி, நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) காலஞ்சென்றவர்களான படிகலிங்கம், திருநீலகண்டன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சண்முகம் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்,கச்சேரி, மன்னார்) அவர்களின் சகலனும், மிதுஷன் (அவுஸ்திரேலியா), தனிஷா (லண்டன்), தர்ஷனா (லண்டன்), வருன் (கனடா), கவீன் (கனடா) ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.11.2014 புதன்கிழமை அன்று குமாரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 12 மணிக்கு இறுதிக்கிரியைகள் யாவும் நடைபெற்று, நீர்கொழும்பு பொது மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2/20, மோரஸ் ஸ்கீம் (Mores Scheme),
கடோல்கல் வீதி, நீர்கொழும்பு.

தகவல்:
**குடும்பத்தினர். 077 315 4507**

(53782)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
24 . 02 . 1927



**தோற்றம்**
06 . 10 . 2014

## அமரர் முத்து பொன்னையா

(முன்னை நாள் கிளை முகாமையாளர்
ப.நோ.கூ.ச.சாவகச்சேரி)

கடந்த 06.10.2014 ஆம் திகதி திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் துயரச் செய்தி அறிந்து நேரடியாகவும், துண்டுப் பிரசுரங்கள், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றம் உறுதுணையாக நின்று உதவிய உற்றார், உறவினர், அயலவர் அத்துடன் நோயுற்ற வேளை உதவிக்கரம் நீட்டிய சாவகச்சேரி மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை 10 ஆம் இலக்க விடுதி வைத்தியர்கள், பணியாளர்கள் யாவருக்கும் எமது சிரந்தாழ்த்திய நன்றிகள்.

இன்று 03.11.2014 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக் கிரியைகளும், 05.11.2014 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.
T.P: 021 205 0610

தகவல்:
**குடும்பத்தினர்.**

(47320)

# பூநகரி - கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

இலங்கை போக்குவரத்து சபையால் பூநகரியில் இருந்து கொழும்புக்கான புதிய பஸ் சேவை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் நாள் சேவையில் 30 இற்கும் மேற்பட்டோர் பஸ்ஸில் பயணித்துள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் பூநகரியில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புக்கான பஸ் சேவையும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பூநகரியில் இருந்து மாலை 5 மணிக்கு புறப் படும் பஸ் முழங்காவில் ஊடாக உயி லங்குளம், பறையனாழங்குளம் வீதியூடாக மன்னார் வீதியை அடைந்து மத வாச்சியூடாககொழும்பு கோட்டை புகையிரத நிலையம்வரைசேவை யில் ஈடுபடும். அத்துடன் கொழும்பில் இருந்து இரவு 7.30 மணிக்கு அதே வழியூடாக பூந கரிவரை பஸ் சேவை ஒன்றும் இடம்பெறும்.

பூநகரி மற்றும் முழங் காவில் , உயிலங் குளம் பகுதி மக்களின் போக்குவரத்தை இலகு படுத்துமுகமாக இந்த பஸ் சேவை ஆரம்பிக் கப்பட்டுள்ளது. (ற-14)

**அறைவாடகைக்கு உண்டு**

பல்கலைக்கழகத்திற்கு அருகில் பல்கலைக் கழக மாணவிகளுக்கு அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 180 7672

# மரண அறிவித்தல்

**பொன்னையா ஞானபண்டிதன் (ஞானா)**

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னையா ஞானபண்டிதன் (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - மங்களம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு, நடராசா, சச்சிதானந்தன் மாசிலாமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (03.11.2014) திங்கட் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53751)

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி பிறிசில்லா போல் -**
**(திருக்குடும்ப சபை)**

யாழ்.நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான, அருட்சகோதரி மேரி பிறிசில்லா போல் 01.11.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து போல்-சிசிலியா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அன்ரன், புஸ்பம், சறோ றெஜீனா மற்றும் அருமைநாயகம், தேவநாயகம் (தி.கு. பொது நிலையினர் தேசிய தலைவர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முத்துராஜா, C.B அன்ரன், மரியநாயகம் மற்றும் சாந்தி, யோசபின் (தவம்) ஆகியோரின் மைத்துனியும், மாலினி, வனஜா, யூட்பெபியன், யக்குலின், யஸ்மின், காலஞ்சென்ற அருள் சத்தியன் மற்றும் செல்வி, சுபத்திரா, அருண், கேமன்ராஜ், பிரியா, மாரி கல்பனா ஆகியோரின் அன்ராவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2014) திங்கட்கிழமை யாழ்.திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ்.பேராலயத்தில் மு.ப.9.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர், யாழ்.புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.180, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

(53777) (1.3.6)

தகவல்:
**போல் தேவநாயகம்.**

# மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை திருஞானச் செல்வம் (ஞானத்தார்)**

கலட்டி அம்மன் கோயிலடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருஞானச்செல்வம் (ஓய்வு பெற்ற அச்சக ஊழியர்), அவர்கள் 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மகனும், திருமதி பத்மாவதி (ஓய்வு பெற்ற நெசவுப் போதனாசிரியர், வேலணை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி)யின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், குணசிங்கம், மகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், செந்தமிழ்செல்வி, செந்தமிழ்செல்வன் (பிரான்ஸ்),குமரகுரு (லண்டன்), உஷாந்தி (லண்டன்) ஆகியோரது பாசமிகு தந்தையும், அ.நித்தியராசா (தபால் அலுவலகம், கோப்பாய்), தர்ஷினி (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரது அன்பு மாமனும் பிரணவி, டதுசிகா, கபிலஸ், விது, பரத்,மிடுவரன், டதுஷன், கபிஷன், சகினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை.
T.P :077 00 6 4330, 021 561 5575

தகவல்: **திருமதி.பத்மாவதி**
நெசவு ஆசிரியை (மனைவி)

# மரண அறிவித்தல்

**பொன்னையா சண்முகராஜா**



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சண்முகராஜா சனிக்கிழமை (01.11.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா- பாக்கியம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தங்கராஜா, பராசக்தி, பூமணி, கமலாம்பிகை, தியாகர்ராஜா மற்றும் சிவராஜா, சின்னராஜா ஆகியோரின் சகோதரனும், சுபத்திராதேவி, திலீப்குமார், சந்திராதேவி, சரஸ்வதிதேவி, சாந்தினிதேவி, பாலகுமார், செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் தனேஸ்வரி, குணரட்ணம், பாரிமனோகரன், சக்திவேல், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2014) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிய ளவில் நடைபெற்று, பூதவுடல் மாதம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.7, நிமு செட்டில் மென்ட் வீதி,
3 ஆவது ஒழுங்கை, புத்தளம்.
T.P :077 782 1983

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## செல்வன் ஆகாஸ் திருலோகசிங்கம் (பிரான்ஸ்)

பிரான்ஸ் Drancy ஐ பிறப்பிடமாவும், வதிவிட்மாகவும் கொண்ட ஆகாஸ் திருலோகசிங்கம் 30.10.2014 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு - தையல் நாயகி தம்பதிகள் (தச்சந்தோப்பு) மற்றும் யோகரெட்ணம் நித்தியலட்சுமி (ஓட்டுமடம்) தம்பதிகளின் அன்புப் பேரனும், திருலோகசிங்கம் நிமலினி (பிரான்ஸ்) தம்பதிகளின் செல்வப்புதல்வனும், ஆஷா, மதுஷா ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைசிங்கம் சரஸ்வதி (பூநகரி), காலஞ்சென்ற கனகரெட்னம் கைலாசபதி, தியாகராஜா பரமேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், தில்லைநடராஜா, செல்வி, சமித்திரா, ஐயாத்துரை (ஓட்டுமடம்) சாவித்திரி பத்மநாதன் (பிறவுண்வீதி), குமுதினி,ராசேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், நிமலரட்ணம் (பிரான்ஸ்), சசிகலா, திலகவதி சிவபாலன் (கல்வியங்காடு), தியாகபதி ராதா கிருஸ்ணன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (04.11.2014) ஒரு மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

240 மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.
T.P : 021 320 3600 (53778)

தகவல்:
பேரன் யோகரட்ணம் நித்தியலட்சுமி (ராசா)
மயூரன் (சகோதரன்)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சவீனம்மா அந்தோனிப்பிள்ளை




இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
ஆகியோருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இந்தியா. (53775)(4.3.6)

நவம் நிர்மலா, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் உருத்திரர்

காரைநகர், ஆயிலியை பிறப்பிடமாகவும் சுவிஸ் ZURICHஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் உருத்திரர் 30.10.2014 வியாழக்கிழமை ZURICH இல் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், கஜவதனா, கஜலக்ஷி, கஜஅட்ஷயா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பரமசிவம், இராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருமதி பரமசிவம் மற்றும் சண்முகராஜா, யோகேஸ்வரி, உருத்திரசிங்கம் (ஆசிரியர், யா/ யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் மைத்துனரும், சுந்தரலிங்கம், தேவமனோகரி (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு KREMATORIUM NORDHEIM, KAFERHOLZSTRASSE 101 8057 ZURICH SWITZERLAND இல் நடைபெற்று, பிற்பகல் 13.30 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

அன்னாரின் துக்க நிகழ்வு இல.19, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0041 4445 08790
Switzerland

(53774)(4.6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## வீரவாகு கதிரவேற்பிள்ளை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு கதிரவேற்பிள்ளை (01.11.2014) சனிக்கிழமை இந்தியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு-செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமணி-ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சக்திவேல் (கனடா), சிவவேல், சிவாஜினி(சுவிஸ்), சக்தியாயினி(டென்மார்க்), முருகவேல் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆரணி(கனடா), சிவச்சந்திரன் (சுவிஸ்), முரளி (டென்மார்க்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற வர்களான கந்தசாமி, சண்முகலிங்கம் மற்றும் தில்லைநாயகி, விசாகப்பெருமாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற திலகவதி மற்றும் சிவமணி இளையதம்பி, யோகேஸ்வரி, முத்துலிங்கம், புவனேஸ்வரி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் மைத்து னரும், நடராசா, இந்திராணி, காலஞ்சென்ற தணிகாசலம் ஆகி யோரின் சகலனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், மகேஸ்வரி தம்பதிகள் மற்றும் கேசவநாதன், குணலட்சுமி தம்பதியரின் சம்பந்தியும் , கீர்த்திகன், தனுஷ், சியான், நயனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


54, சங்கிலியன் வீதி, நல்லூர்,
021 205 4014

(53771)(4.6)

தகவல்:
இளையதம்பி
தில்லைநாயகி (சகோதரி)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்



யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், மாங்குளத்தை வதிவிடமாகவும், வவுனியா கூமாங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் (01-11-2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பராபரன் (பிரித்தானியா), சுதர்சினி (பிரித்தானியா), றஜிபரன் (உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச் சபை, வவுனியா) ரின் பாசமிகு தந்தையும் லுபாஜினி (பிரித்தானியா), சசிதரன் (பிரித்தானியா), கௌசல்யா (முகாமைத்துவ உதவியாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகனா, கிஷா, டினுஷா, யாகவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சண்முகராசா, நாகேஸ்வரி, செல்வராசா, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, விக்னேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சிதமலர், சச்சிதானந்தமூர்த்தி (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், மாங்குளம்), ஜெகதீஸ்வரி, யோகேஸ்வரி, நாகேஸ்வரமூர்த்தி (ஜேர்மனி), தனேஸ்வரி, குகனேஸ்வரி, ஜெயமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நெலுக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| பரா.பரன் | பிரித்தானியா |
| செல்லிடப்பேசி: | +0044 7917826627 |
| சசிதரன் சுதர்சினி | பிரித்தானியா |
| செல்லிடப்பேசி: | +0044 7903059542 |
| றஜிபரன் | இலங்கை (வவுனியா) |
| தொலைபேசி: | +0094 242051520 |
| செல்லிடப்பேசி: | +0094 778800660 |

(53769)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்
இல. 5, தனிநாயகம் வீதி,
கூமாங்குளம், வவுனியா.

# 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார்
Rajah Mahendran
RETD.SLAF, INDRAN
Consultant Vasanthy
ஓய்வுபெற்ற லயனர்
அதிகாரி

Suresh Priyanthi Mahendraraj


மறைவு
03 / 11 / 1987

உடுவில்
Vasanthy Sivapatham இத்தின் அன்புப் புதல்வர்கள்

இருபத்தி ஏழு ஆண்டுகள் ஆனாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பால் அனைவரையும் கவர்ந்துவிட்டுச் சென்றதேனோ?
என்றும் நீங்கள் எம் நெஞ்சில் வாழ்ந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

80/3, MAE VILLA மானிப்பாய் வீதி, உடுவில். (53753)(5.6) குடும்பத்தினர்.

# 45ஆம் நாள் நினைவில்...



அமரர்
## ஆறுமுகம் தருமநாயகம்
(ஆனந்தம் – மண்டைதீவு)

திதி : சுவாதி

மலர்வு
21.03.1944

உதிர்வு
20.09.2014

ஆனந்தம் அடங்கியதில் - எமது
ஆனந்தமும் அடங்கியது
விடை தெரியாத - பல
வினாக்களை தந்துவிட்டு.
விதியின் வழியினிலே
விரைந்து சென்றதுதான்
எங்கே அப்பா.....?

ஆடியம்பிட்டி ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(53765)(7.6)

# ஃபெடரரை வெளியேற்றினார் ரயோனிக்



பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் காலிறுதியில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் ஃபெடரரை வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறினார் கனடாவின் மிலோஸ் ரயோனிக். இதன் மூலம், உலக 'டூர் ஃபைனல்ஸ்' தொடரில் பங்கேற்பதற்கான போட்டியில் ரயோனிக் நீடிக்கிறார். பிரிட்டன் தலைநகர் லண்டனில் நவம்பர் 6ஆம் திகதி 'டூர் ஃபைனல்ஸ்' இறுதிப போட்டி நடைபெறவுள்ளது. இதில் தரவரிசையில் முதல் 8 இடங்களில் இருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். தரவரிசையில் முன்னணியில் உள்ள செர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ஃபெடரர், ஸ்டான் வாவ்ரிங்கா, குரோஷியாவின் மரின் சிலிச், பிரிட்டனின் ஆண்டி முர்ரே, செக் குடியரசின் தாமஸ் பெர்டிச் ஆகிய ஆறு பேர் டூர் ஃபைனல்ஸ் போட்டிக்கு தகுதி பெற்று விட்டனர்.

மீதமுள்ள 2 இடங்களுக்கு ஜப்பானின் நிஷிகோரி, ஸ்பெயினின் டேவிட் ஃபெரர், கனடாவின் மிலோஸ் ரயோனிக் ஆகியோரிடையே கடும் போட்டி நிலவுகிறது. டூர் ஃபைனல்ஸ் போட்டிக்கு முன்னதாக பிரான்ஸில் பரிஸ் மாஸ்டர்ஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதியில் வேகமாக 'சர்வ்' செய்வதில் வல்லவரான மிலோஸ் ரயோனிக், 7:6 (4), 7:5 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றார். இதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறியதோடு, உலக 'டூர் ஃபைனல்ஸ்' போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பையும் தக்க வைத்துக் கொண்டார்.

மற்றொரு காலிறுதியில் ஜோகோவிச், ஆண்டி முர்ரேவைத் தோற்கடித்தார். நிஷிகோரி, டேவிட் ஃபெரரை வீழ்த்தினார். அரையிறுதியில் ஜோகோவிச், நிஷிகோரியை எதிர்கொள்கிறார். ரயோனிக், தாமஸ் பெர்டிச்சைச் சந்திக்கிறார். (ற)

## தொடர்ச்சிகள்

### காங்கேசன்

திணைக்களம் துரிதமாக செயற்பட்டு வருகின்றது. கடந்த மாதம் 13 ஆம் திகதி யாழ். வரைக்குமான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வரையான புனர்நிர்மாணப் பணிகள் சற்று பாதிக்கப்பட்டிருந்தன. காங்கேசன்துறை வரைக்குமான ரயில்சேவைகளை திறப்பதற்கு வசதியாக இதற்கான சகல முன்னேற்பாடுகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு அரசு ரயில்வேதிணைக்களத்தைக் கேட்டுள்ளது."- என்று தெரிவித்தார். (ற-17)

### தொழில்

பில் கூறும்போது,

"ஐரோப்பிய ஆசிய நாடுகளில் கூட்டுறவுத் தொழில்சம்பந்தமாக தொழிலாளர்களின் தொழில் சம்பந்தமான சட்டங்கள் நடைமுறைகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் தொழிலாளர்களின் தொழில் சட்டங்கள் நடைமுறை விதிகள் போன்றவை பகிர்ந்து கொள்ளப்படவுள் என. குறிப்பாக இலங்கையில் தொழில் சட்டங்கள் மற்றும் தொழிலாளர்களின் தொழில் சம்பந்தமான நடைமுறைகள் போன்றவை மாநாட்டில் விவாதிக்கப்படும். இலங்கையை விட ஏனைய நாடுகளில் தொழிலாளர்களின் சட்டங்கள், நடைமுறைகள் சிறப்பாக பின்பற்றப்பட்டால் அதை இலங்கையும் இம்மாநட்டில் மூலம் கற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். இந்த மாநாட்டில் வவுனியா மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் நிவோதிக பேரின்பநாயகம் மற்றும் நான்கு தொழில் திணைக்கள உயரதிகளும் பங்கு பற்றவுள்ளனர்."- என்று தெரிவித்தார். (ற-17)

### பாப்பரசரின்

பதி அலுவலகம் சனிக்கிழமை மாலை விடுத்துள்ள அறிக்கையொன்றில் பரிசுத்த பாப்பரசரின் பயணத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் துரிதமாக நடைபெறுவாக தெரிவித்துள்ளது.

பாப்பரசரின் பயணம் வெற்றிகரமானதாக அமையும் என அரசு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பின் பேரிலேயே இந்தப் பயணம் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# மைல்கல்லை எட்டிய ரெய்னா

இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் களமிறங்கிய ரெய்னா, 200 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். அத்துடன் இந்தப் போட்டியில் 34 பந்துகளில் 52 ஓட்டங்கள் (3 சிக்சர், 4 பவுண்டரி) குவித்த ரெய்னா, ஒருநாள் போட்டியில் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 11ஆவது இந்தியர் என்ற சாதனையும் படைத்துள்ளார்.

இவர் மொத்தம் 200 போட்டிகளில் விளையாடி 5008 ஓட்டங்கள் குவித்துள்ளார். இவரது அதிகபட்ச ஓட்டம் 116 என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



## விழிபிதுங்க வைத்த ஜெயவர்த்தன

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்த்தன டுவிட்டரில் இந்திய ரசிகர் ஒருவரை கிண்டலடித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை பாதியிலே கைவிட்டதால் இலங்கை கிரிக்கெட் அணி அவசர பயணமாக இந்தியா சென்று 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இந்த தொடருக்கு முன்னதாக நடந்த பயிற்சி ஆட்டத்தில் இந்திய 'ஏ' அணியுடனான போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தது.

இது தொடர்பாக ஜெயவர்த்தன டுவிட்டரில் 'நாங்கள் பயிற்சி ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை விளையாடவில்லை. ஆனால் இது ஒரு நல்ல பயிற்சியாக அமைந்தது. தற்போது புவனேஷ்வருக்கு வந்து சேர்ந்துள்ளோம். பயிற்சி நாளை தொடங்குகிறது எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த இந்திய ரசிகர் ஒருவர் 'இந்திய ஏ அணியுனான போட்டியிலே தோற்றுவிட்டீர்கள்' என கிண்டல் டிவிட் செய்தார்.

இதற்கு கூலாக பதிலளித்த ஜெயவர்த்தன 'ஒரு வேளை நாங்கள் இந்திய அணியை தோற்கடித்து விட்டால், இந்திய அணியை விட இந்திய 'ஏ அணி தான் சிறந்தது என ஆகிவிடுமா?' என பதிலுக்கு கிண்டலடித்தார். (ற)


# கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
## தரம் 5 புலமைப்பரிசில் பாராட்டு விழா 2014.11.03



**மாவட்டத்தில் முதல்நிலை மாணவி**



**செல்வி
வி.மதுமிதா
புள்ளி 183
மா.நி - 01**

திருமதி அ.உதயபாபு (ஆசிரியர்), திருமதி ச.கணேசன் (பிரதி அதிபர்), திருமதி ஜெ.தனபாலசிங்கம் (அதிபர்), திருமதி ஜெ.துரைசிங்கம் (பிரதி அதிபர்), செல்வி ச.கனகச்சந்திரன் (வகுதித் தலைவர்), திருமதி தி.பாலகுமார் (ஆசிரியர்)

இவர்களுடன் சித்திபெற்ற மாணவர்களான

**இ.வலம் முதலாம் வரிசை** க.சங்கவி - 178, கௌ.அஹிம்சா - 180, வி.மதுமிதா - 183, அ.பிரகாசினி - 163, கே.பிரஷாயினி - 174

**இ.வலம் 2ஆம் வரிசை** ஜெ.அபிநயன் - 168, ஶ்ரீ.சங்கீர்த்தன் - 175, ந. கெனற்சாரோன் - 161, ச.சஜிதன் - 173, தி.ஷியானா - 167, ஶ்ரீ.துர்க்கா - 163, அ.யசோதா 158, த.தமிழினி - 169, சு.சேந்தினி - 168, நா.கேசவன் - 165, ர.நிலோசன் - 171, ஜெ.கிருசாந் - 174, சி.டஜீவன் - 164, இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 21 மாணவர்களும் காணப்படுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இவர்களைக் கற்பித்து நெறிப்படுத்திய ஆசிரியர்கள் அதற்கான வளங்களை ஏற்படுத்திக் கொடுத்த அதிபர், உபஅதிபர் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கரடிப் போக்கு,
கிளிநொச்சி

Best Wishes

*வாழ்த்துவோர் :* கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிச் சமூகம்

(51664)

# தொடர்ச்சிகள்

## பாதிக்கப்பட்ட

இவர்களுடன் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களும் சென்றிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, பொன்.செல்வ ராஜா, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேத்திரன், சி.சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், சீ.யோகேஸ்வரன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரும், ஜனநாயக மக்கள் முன்னணியில் அதன் தலைவர் மனோ கணேசன், மேல் மாகாண சபை உறுப்பினர் சண். குகவரதன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா ஆகியோரும், மலையக மக்கள் முன்னணியில் அதன் அரசியல்துறைத் தலைவரும் தாவரவியல் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு பிரதி அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன், ஜனாதிபதியின் இணைப்புப் பணிப்பாளரும் மலையக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளருமான அ.அரவிந்தகுமார் ஆகியோரும் சென்றிருந்தனர். இவர்களுடன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.இராஜதுரையும் சென்றிருந்தார்.

இவர்கள் முதலில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மீரியபெத்தக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதோடு, தேடுதல் நடவடிக்கைகளையும் கேட்டறிந்தனர்.

அதனைத் தொடர்ந்து இவர்கள் அனைவரும் கொஸ்லாந்தை ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயத்திலும், பூனாகலை இலக்கம் 01, இலக்கம் 02 பாடசாலைகளிலும் தங்கியிருந்த பாதிக் கப்பட்ட மக்களைப் பார்வையிட்டனர்.

சொந்தங்களைப் பறிகொடுத்து மீளாத்துயரில் ஆழ்ந்து, சோகமே உருவான உறவினர்களைப் பார்த்துத் தேறுதல் கூறினர். தற்போதைய அவலநிலை குறித்தும் கேட்டறிந்தனர். நிவாரண உதவிகள் குறித்தும், பகுதி மக்களோடு கலந்தாலோசித்தனர்.

இடர் நிகழ்ந்த பகுதிக்கு நேற்று ஐந்தாவது நாளாகப் பல்வேறு பகுதிகளிலுமிருந்தும் பெருமளவில் மக்கள் வந்திருந்தனர். அவர்கள் இயற்கையின் சீற்றத்தால் இடர் விளையக்கூடிய ஆபத்தான பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் குறித்தும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

தோட்டப்புற குடியிருப்புக்கு இலாயக்கற்ற வீடுகள், மண்சரிவுக்கு அண்மித்துள்ள பாதுகாப்பற்ற வீடுகள், மக்களின் அசௌகரியங்கள், வாழ்வாதார நெருக்கடிகள் ஆகியவற்றை நேரில் கண்டும், கேட்டுமறிந்த கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தனர்.

ஒட்டுமொத்தத் தோட்டப்புற மக்களின் அவலநிலையைப் போக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திரமான மனித நேயப் பணிகளை மேற்கொள்ளுமென்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துக் கொண்டனர்.

தமது பயணம் குறித்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா,-

"அங்கு 70 குடும்பங்களைச் சேர்ந்த 380 பேர் அவலத்துக்கு உள்ளாகியுள்ளனர். நேற்று 3 சடலங்கள் மீட்கப்பட்டதோடு இதுவரை 14 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக்காக 2 ஆயிரம் குடும்பங்கள் வெவ்வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, உடை தற்போதைக்குப் போதுமான அளவு கிடைத்துள்ளன. எனவே தாமதமாக பொருள்களை அனுப்புவது நல்லது என்று அங்கு மேற்பார்வை செய்யும் மாவட்ட அரச அதிபர் கூறியுள்ளார். மின்சார வசதி குடிதண்ணீர் குறைவாகவுள்ளது. பெண்கள் ஆண்கள் ஒரே மண்டபத்தினுள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன."- என்று தெரிவித்தார்.(ற-4)

## ரணிலை

அறிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி வேறு ஓர் வேட்பாளரை நிறுத்தினால் ஆதரவளிக்கத் தயார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது. யாரை பொதுவேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளர் தாமே என ரணில் விக்ரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ளார். ரணிலுக்கு ஆதரளிக்கப்படும் என சஜித் பிரேமதாஸவும் அறிவித்துள்ளார். (ற)

## 147 பேருக்கு

கடந்த இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் ஜனவரி, ஜூலை மற்றும் ஒக்ரோபர் ஆகிய மூன்று மாதங்களிலும் ஒரே எண்ணிக்கையில் (148) பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரிலும் என்றுமில்லாதவாறு இந்தமாதம் 51 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியாவில் 3 பேரும், முல்லைத்தீவில் 2 பேரும் கிளிநொச்சியில் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை ஆயிரத்து 32 பேரும், மன்னாரில் 140 பேரும், வவுனியாவில் 108 பேரும், முல்லைத்தீவில் 87 பேரும், கிளிநொச்சியில் 47 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் மாத்திரம் 11 ஆயிரத்து 303 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு நாடளாவிய ரீதியில் 34 ஆயிரத்து 963 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

## தீர்வுக்கான

வலுவிழந்து போகின்றது. இது மக்களின் அமைதியான ஒற்றுமையானவாழ்வைச் சீர்குலைக்கின்றது. இந்த விடயத்தில் மத இன நல்லிணக்கங்களை முதலில் குருமார்கள் மத்தியிலும் அவர்கள் மூலமாக மக்கள் மத்தியிலும் தோற்றுவிக்கும் முயற்சி பாராட்டத்தக்கதாகும்."- என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"அரச மதமாகவும் பெரும்பான்மை மதமாகவும் உள்ள பௌத்த குருமார்களே நாட்டில் உள்ள எமது இந்து மத வழிபாட்டுத்தலங்களை பாதுகாத்துத் தாருங்கள். சைவ மக்களின் வழிபாட்டினை சுதந்திரமாகவும் அமைதியாகவும் ஈடுபட வழிசமைத்துத் தாருங்கள். இதன் மூலமாக எமது சமயத்தின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படுவதுடன் மக்களின் இறை நம்பிக்கையும் வலுவடையச் செய்கின்றது. அத்துடன் எமது பிரதேசத்தில் இன்னும் வழிபாட்டிற்கு இடமளிக்கப்படாத ஆலயங்களும் இருக்கின்றன. குறைந்த பட்சம் முதலில் நித்தியமான ஒரு நேர வழிபாட்டிற்காகவது வழிசமைத்துத் தாருங்கள். இதன் மூலமாக மக்கள் வருங்காலத்தில் தமது பிரதேசங்களில் வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்படலாம்.

எமது நாட்டில் சைவசமய வழிபாட்டுக்கு உள்ள தடங்கல்கள் பற்றி பௌத்த பீடாதிபதிகளுக்கு எடுத்துக் கூறுங்கள். மத நல்லிணக்கத்தினையும் வருங் காலத்தில் இன நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்தும். இவ்வாறான ஆக்கபூர்வமான செயற்பாடுகளே நிரந்த சாந்தி சமாதானத்தினை ஏற்படுத்தும்."- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-14)

## தூக்குத்

வலகத்துக்கும் சென்று அவர்கள் கையளித்தனர்.

"இந்த மூன்று குடும்பத் தலைவர்களையும் நம்பி மனைவிமார் மற்றும் சிறு வயது பிள்ளைகள் உள்ளனர். குடும்ப வருமானமின்றி கதியற்று வறுமையில் வாடிநிற்கும் எமது நிலையை கருணையுடன் நோக்குங்கள். இலங்கை நீதித்துறையை நாம் மதிக்கிறோம். ஆயினும் சாவுத் தண்டனைத் தீர்ப்பு எங்களை ஆழ்ந்த துயரத்துக்குள் தள்ளியுள்ளது. எனவே திருத்தந்தை அவர்களே எமது பரிதாப நிலையை கருத்தில் கொண்டு மரணதண்டனைத் தீர்ப்பைக் குறைத்து இவர்களுக்கு கருணை காட்டி எம்மோடு இணைந்து வாழ ஆவன செய்ய வேண்டும்" என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநகர் மற்றும் மண்டை தீவைச் சேர்ந்த ஞா.துஷாந்தன் (வயது-27), மு.கிறிஸ்ரியன் (வயது-38), கி. கில்மன்ராஜ் (வயது-28) ஆகியோருக்கே போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றினால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.(ற-135)

## வடக்கு

முல்லைத்தீவில் நேற்று இடம் பெற்ற அமர்வில் அதனை ஏற்க மறுத்துள்ளது.

புத்தளத்தில் சி.ஐ.டியினரால் கொண்டு செல்லப்பட்டவர்கள் தொடர்பிலான முறைப்பாட்டையே காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று மறுத்துள்ளது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் முல்லைத்தீவில் நேற்று இரண்டாவது தடவையாகவும் ஆரம்பமானது. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இடம்பெற்ற அமர்வில் 57 பேர் விசாரணைக்காக அழைக்கப்பட்ட போதும் 44 பேரே சாட்சியமளித்துள்ளனர்.

இதன் போது முஸ்லிம்கள் இருவர் சாட்சியமளித்தனர். அதில் ஒருவர், தாங்கள் முல்லைத் தீவைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் என்றும் இடம் பெயர்ந்து புத்தளத்தில் தங்கியிருந்த போது, ஓமந்தைக்கு வரும் வழியில் தமது உறவினர்கள் காணாமற் போய்விட்டனர் என்றும் தெரிவித்தார். மற்றையவர், தனது மகனை புத்தளத்தில் வைத்து சி.ஐ.டி. யான ரபீக் என்பவரே கடத்திக் கொண்டு சென்றார். அதனை அவர் ஒப்புக் கொண்டார். அதன் பின்னர் எனது மகனைக் காணவில்லை என்று தெரிவித்தார். அப்போது ஆணைக்குழுவினர், வடக்கு - கிழக்குப் பிராந்தியத்துக்கு வெளியே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமையால் இதனை ஏற்க முடியாது. பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் முழங்காவில் மகா வித்தியாலத்தில் இடம்பெற்ற அமர்வில், கொழும்பில் வைத்து கராட்டி மாஸ்ரரான தனது மகன் காணாமற் போனமை தொடர்பில் தாய் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை ஆணைக்குழுவினர் முழுமையாக விசாரணை செய்து ஏற்றுக் கொண்டனர். (ற-5)

## சாட்சியங்கள்

முடிவடைந்தது. இருப்பினும் அதன் பின்னர் வழங்கப்படும் சாட்சியங்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறை வேற்றப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணையில், இலங்கையில் கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம் பெற்ற சகல குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை கோரியிருந்தது.

அதற்கமைய கடந்த ஜூலை மாதம் ஐ.நா விசாரணைக் குழுவின் விசாரணைகள் ஆரம்பமாகியிருந்தது. இந்த விசாரணைக்குழுவிற்கு ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் சாட்சியமளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. சாட்சியமளிக்க வேண்டிய காலப் பகுதி கடந்துள்ள போதும், தற்போது வழங்கப்படும் சாட்சியங்களும் ஏற்றுக் கொள்ளப் படும் என்று ஆணைக்குழு தெரி வித்துள்ளது. (ற-5)

## உயிரைப்

திய பாடசாலை மாணவன் உயிரிழந்தான். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் நடந்துள்ளது. மூளாய் வீதி, வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் நடராஜா சுரேசன் (வயது-16) என்பவரே உயிரிழந்தவராவார். தனியார் வகுப்புக்குச் சென்றிருந்த தனது சகோதரனை ஏற்றுவதற்காக, உறவினர் ஒருவரின் மோட்டார்சைக்கிளைக்கொண்டு சென்றார் என்றும் அவர் தலைக்கவசத்தை அணியாது கையில் கொண்டு சென்றிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. சுரேசன் உடனடியாக மூளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப் பட்டது. தற்போது சடலம் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ற-4)

## போரின்

பட்டன. காணாமற் போனோர் தொடர்பிலான நேற்றைய விசாரணையின் போது சாட்சியமளித்த பலர், போரின் இறுதிக் கட்டங்களில் காணாமற் போனமை தொடர்பிலேயே தெரிவித்தனர்.

பெண் ஒருவர், வட்டுவாகலில் வைத்து மே 17 ஆம் திகதி தனது கணவர் இராணுவத்தினரிடம் நேரடியாகச் சரணடைந்ததாகவும், அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தனகர்த்தினம் உடனிருந்தார் என்றும் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். இதன் பின்னர் தனது கணவன் பற்றிய தொடர்பு எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார்.

கடலினூடாக புல்மோட்டைக்கு தப்பிச் செல்ல முயன்ற வேளை, கடற்படையினர் விசாரணைக்கு என்று தங்களது உறவுகளை கடலில் வைத்துக் கொண்டு சென்றனர் என்றும் அதன் பின்னர் என்ன நடந்தது என்பது இதுவரையில் தெரியாது என்றும் உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

மேலும் தமது உறவுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கொக்கிளாய் பகுதியில் வைத்துக் கடத்தியதாக பெரும்பான்மையினத்தவர்கள் இருவர் சாட்சிய மளித்தனர்.(ற-5)

## மாகாண சபை

எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் தற்போது இறக்குமதி தீர்வையை தாமே செலுத்தி முதல் கட்டமாக 7 வாகனங்களை வடக்குக்கு கொண்டுவர இந்தியா முடிவு செய்துள்ளது. அதற்காக கொழும்பில் இருக்கும் வாகன இறக்குமதி நிறுவனங்கள் 7 இடமிருந்து கூறுவிலையைக் கோரியுள்ளது. விரைவில் 7 நிறுவனங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதனூடாக வாகனங்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளது. இம்மாத இறுதிக்குள் அந்த வாகனங்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின் றது. (ற-5)

## தமிழ்

கப்பட்டன ஆய்வாளர்களாக கவிஞர் சோ.பத்ம நாதன் யாழ் பல்கலைகழக விரிவுரையாளரான ராஜேஸ்கண்ணன் உட்பட ஆய்வாளர்களால் கட்டுரைகள் சமர்ப்பிக் கப்பட்டன ஆய்வரங்க தொகுப்பு ரையை யாழ் பல்கலை கழக தமிழ் துறை விரிவுரையாளர் குமரன் வழங்கினார்.

இதன் பின் மாலை நிகழ்வுகள் வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்று பிற்பகல் வெகு சிறப்பாக இடம்பெற்றது நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பண்பாட்டு ஊர்திப்பவனி இடம்பெற்றது இப்பண்பாட்டு ஊர்திப்பவனி வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகி யாழ் வீதியில் வந்து மணிக் கூட்டு கோபுர சந்தியூடாக கந்த சாமி கோயில் வீதிக்கு திரும்பி நிகழ்வு இடம்பெறும் இடமான வவுனியா இறம்பைகுளம் மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது இப்பண்பாட்டு ஊர்தியில் தமிழ் பண்பாட்டை பிரதிபலிக்கும் பல்வேறு ஊர்திகள் அணிவகுத்து வர கோலாட்டம் காவடிகள் பொம்மலாட்டம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றது.

இப்பண்பாட்டு ஊர்தி கந்தசாமி கோயிலை நெருங்க மழை சற்று தலைகாட்டினாலும் பண்பாட்டு பேரணி குழப்பமின்றி வெகு சிறப்பாக இடம்பெற்றது இதன் பின் மேடை நிகழ்வுகள் வடமாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமானது நிகழ்வில் தமிழ் தாய்க்கான மாலையை வடமாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் அணிவித்தார் தொடர்ந்து விருந்தினர்கள் மங்கலவி எக்கேற்றி வைத்தனர் அதை தொடர்ந்து வரவேற்புரையை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிபணிப்பாளர் உஸா சுபலிங்கம் நிகழ்த்தினார்

இந்த நிகழ்வின் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான தியாகராஜா லிங்கநாதன் இந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர் அடுத்து முதலமைச்சர் விருது வழங்கப்பட்டது இவ்விருதுகளை வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் வழ்ங்கினார் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ற)

## சிறியதொழில்

அறிவு, தொழில் முயற்சி தொடர்பான திறன்கள், நிதி முகாமைத்துவம், சுற்றாடலுக்கு பொருத்தமான வகையில் தொழில் முயற்சியை நிலைத்து நிற்கக்கூடியதாக முன்னெடுத்தல் என்பதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வங்குரோத்துநிலைக்குள்ளாதல் மற்றும் அவர்கள் தமது கடன்களை செலுத்த முடியாத அபாயம், புதிய தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சியினை ஆரம்பிக்கவும், நிதிவசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவசியமான அறிவினையும் பல்வேறு வழிகாட்டல்களும் வழங்கப்படவுள்ளன. சிறியளவிலான தொழில் முயற்சிஒன்றினைமுன்னெடுத்து வருபவர்களுக்கும் மேற்படி நிகழ்வு பொருத்தமுடையதாகும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையினர், வியாபாரத்துறையினர் மேற்படி பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றலாம். மேலதிக விவரங்களை இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.(ற-14)

## தேர்தல்

விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் திகதி குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. அடுத்த வருடம் முதற்பகுதியில் அது நடைபெற்றாலும் கூட நாங்கள் அரசமைப்பு மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். தங்களுடைய வேட்பாளர் வென்றால் 6 மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்போம் என்று சில கட்சிகள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை இல்லாமல் அவர்களால் அதனை செய்ய முடியாது."- என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## 9 ஆயிரம் ஏக்கரிலேயே மரமுந்திரிகைச் செய்கை

### மட்டு மாவட்டத்தில்

மட்டக்களப்பு, நவ.3

மட்டக்களப்பு மாவட்டத்தில 45 ஆயிரம் ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பண்ணக்கூடியதாக உள்ளது. ஆனால், இதுவரையில் 9 ஆயிரம் ஏக்கரிலேயே மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் பா.சசிகரன் தெரிவித்தார்.



எஞ்சிய 36 ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 3 வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூலமாக மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகளை பொதுமக்கள் பெறமுடியும் என்றும் அவர் கூறினார்.

அரை ஏக்கரிலிருந்து 10 ஏக்கர்வரை மரமுந்திரிகை செய்கை பண்ணுவதற்கு தாம் உதவவுள்ளதாகவும் பொதுமக்கள் எவ்வேளை நாடுகின்றபோதும் வேண்டிய உதவிகளையும் ஆலோசனைகளையும் மேற்கொள்வதற்கு மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயம் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தால் மரமுந்திரிகைக் கன்றுகள், தேவையான ஆலோசனைகள், பசளைகள் மற்றும் கொடுப்பனவுகள்; மானியமாக வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அவற்றைப்பெற்று உரிய பலன் அடைய இம்மாவட்ட மக்கள் முன்வர வேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மரமுந்திரிகைச் செயற்பாட்டியில் வெற்றி எட்டமுடியு என்பதுடன், இவை மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் என்றும் அவர் கூறினார். (வ)

# இலங்கையைக் கண்டித்து புதனன்று தொடர் போராட்டம்

## பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு

சென்னை,நவ.3

போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஐந்து பேரையும், விசாரணைக் கைதிகளாக இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மேலும் 9 மீனவர்களையும் மீட்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



மேலும் இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள் ஐவரும் அப்பாவிகள், அவர்களுக்கு அநியாயமாக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்ற தமிழகத்தின் வாதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. 5 மீனவர்களுக்கும் போதைப் பொருள் கடத்தலில் எந்த விதத் தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படையாக அறிவித்துள்ள மத்திய அரசு, இவ் விடயத்தில் நீதி சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

தண்டிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க சட்ட ரீதியாகவும், தூதரக ரீதியாகவும், இரு நாடுகளுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அறிவித்திருப்பது ஓரளவு நிம்மதியளிக்கிறது.

ஆனால், இந்த நிம்மதியைக் குலைக்கும் வகையில், இந்திய மீனவர்கள் ஐவரையும் தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக இலங்கையின் சட்டத்தை வளைக்க முடியாது. இந்தத் தீர்ப்பு குறித்து இந்தியா தெரிவித்துள்ள கருத்துக்கள் இலங்கை மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று இலங்கை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்,

சட்டப்படி செயற்படுகிறோம் என்ற பெயரில், இந்தியாவைச் சீண்டிப்பார்ப்பதற்காக நீதிமன்றங்களின் உதவியுடன் தமிழக மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது இலங்கை ஆட்சியாளர்களின் வாடிக்கை ஆகிவிட்டது.

இத்தகைய சூழலில் வழக்கம் போலவே இலங்கை அரசுக்கு வேண்டுகோள்களையும், கோரிக்கைகளையும் விடுத்துக்கொண்டிருந்தால் அது இந்தியாவை எள்ளி நகையாடுவதற்குத் தான் உதவுமே தவிர, தமிழக மீனவர்களைக் காப்பாற்ற ஒருபோதும் உதவாது.

தமிழக மீனவர்கள் ஐவருக்கு தூக்குத் தண்டனை விதித்த இலங்கை அரசைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்ய அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் தொடர் முழக்கப் போராட்டம் நடத்தப்படும். பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி தலைமையேற்பார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (வ)



மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தேவிலாமுனைக் கிராமத்தைச் சேர்ந்த 85 வயதான பெண்ணொருவர் தூண்டில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார். அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்யுவம் அதேவேளை பொழுது போக்காகவும் அவர் இம்மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார். (வ)

### பிரிட்டனில் சட்டவிரோதமாக தங்கிய இலங்கையர் தகவல் இல்லை

பிரிட்டனில் சட்டவிரோதமாக தங்கியுள்ள சுமார் மூவாயிரம் இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் இல்லை என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. பிரிட்டனில் சுமார் 50 ஆயிரம் வெளிநாட்டு பிரஜைகள் சட்ட விரோதமான முறையில் தங்கி இருக் கின்ற போதும், அவர்கள் கைது கள் மற்றும் நாடுகடத்தல்களில் இருந்து தப்பியுள்ளனர்.

கல்வி மற்றும் சுற்றுலா வீசாக்களில் பிரிட்டனுக்குள் பிரவேசித்து, வீசா காலம் நிறைவடைந்த பின்னரும் அங்கு இவ்வாறான எண்ணிக்கையாளர்கள் தலைமறைவாக வாழ்கின்றனர்.

அவர்களில் 3000 இலங்கையர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற போதும், உறுதியான எண்ணிக்கை தெரியவில்லை. அவர்களைத் தேடி கைது செய்து இலங்கைக்கே நாடு கடத்த முயற்சிக்கின்ற போதிலும், அவர்களின் குறித்த தகவல்கள் இல்லாததால் இதனை மேற்கொள்ள முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரிய நூலகம்

### அடுத்த வருடம் திறக்க ஏற்பாடு

அம்பாறை, நவ.3

கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரிய நூலகம் ஒன்றை காத்தான்குடியில் அடுத்த வருடம் திறக்கவுள்ளதாக காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காத்தான்குடி நகரசபையால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா, காத்தான்குடி நகரசபையின் பொது நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்கும். வாசிப்பு அவசியமாகும் என்பதுடன், வாசிப்பு மனிதனை முன்னேற்றும். வாசிப்பின் மூலம் பல்வேறுபட்ட அறிவை நாம் பெற்றுக்கொள்கின்றோம்.

காத்தான்குடியில் ஒரு சிறிய நூலகமே உள்ளது. இந்த நிலையில், நாங்கள் நூலகம் ஒன்றை நிர்மாணித்து வருகின்றோம். இந்நூலகத்தின் நிர்மாணப்பணிகள் அடுத்த வருடம் முடிவடைந்துவிடும். இது கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரிய நூலகமாகத்திகழும்.

மேலும், அடுத்த வருடம் காத்தான்குடி நகரசபைப் பிரிவின் பல்வேறு பகுதிகளிலும் புதிய 06 சிறிய நூலகங்களை காத்தான்குடி நகரசபையால் திறந்துவைக்கவுள்ளோம். இதற்கான முன்மொழிவு 2015ஆம் ஆண்டுக்கான காத்தான்குடி நகரசபை வரவு -செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன"- என்றார். (வ)

# குருக்கள்மடம் புதைகுழி விவகாரம்; அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பு

## வழக்கு நவ.13 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கல்முனை, நவ.3

காத்தான்குடி, குருக்கள்மடம் புதைகுழிதோண்டுவது தொடர்பான வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குருக்கள்மடம் புதைகுழி தோண்டுவது தொடர்பாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் கடந்த மாதம் 2ஆம் திகதி களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நகர்வு மனு தொடர்பான வழக்கு, வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் மீண்டும் எடுக்கப்பட்டது. இதன்போதே, நவம்பர் 13 ஆம் திகதிக்கு நீதிவான் வழக்கை ஒத்தி வைத்தார்.

நவம்பர் 13ஆம் திகதி, இந்த புதைகுழியை தோண்டுவதற்கான ஏற்பாடுகள் குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு நீதிவான் இதன்போது உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற இந்த நகர்வு மனு தொடர்பான விசாரணையின்போது, ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு இடையில் இந்த புதைகுழி தோண்டுவதிலுள்ள தாமதம் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதன்படி களுவாஞ்சிக் குடி பொலிஸார் இது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இந்த அறிக்கையை பரிசீலித்த நீதிவான், அடுத்த மாதம் 24ஆம் திகதி இந்த புதை குழியை தோண்டுவதற்கான ஏற்பாடுகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொள்ள வேண்டுமென ஏற்கெனவே உத்தரவிடப்பட்டதற்கிணங்க நவம்பர் 13ஆம் திகதி இந்த புதைகுழியை தோண்டுவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அதற்கான ஒழுங்குகள் குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென பொலிஸாருக்கு நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டு காத்தான்குடியைச் சேர்ந்த சிலர் கல்முனையிலிருந்து காத்தான்குடிக்கு சென்றுகொண்டிருந்த போது குருக்கள்மடம் பிரதேசத்தில் வைத்து கடத்தி கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-10)

**பங்குச்சந்தை விலைச்சுட்டி (ASPI) கடந்த 5 வருடங்களில் சராசரியாக 23% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது.**

அதேநேரம், வங்கி வட்டிவீதம் சராசரியாக 10.42% ஆக அமைகின்றது




சரியான முதலீடுகள் தொடர்பாக பொருத்தமான தீர்மானத்திற்கு, முழுமையாக நடைமுறை விடயங்களை உள்ளடக்கிய

**இலவச கல்விசார் கருத்தரங்கு**

2014 நவம்பர் மாதம் 8ஆம் திகதி சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை கேட்போர் கூடம் – யாழ்கிளை
147-2/3, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
அழையுங்கள் 0212221455 / 0777622014

CSE COLOMBO STOCK EXCHANGE



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111



## வேலைக்கு ஆள் தேவை

- புத்தக வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள சிட்டை எழுதுநர், விற்பனையாளர் தேவை.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 08.11.2014 சனி மாலை 03.00-05.00

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் - 11.11.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567



## அமெரிக்க அதிஷ்ட விசா - V2 Travels

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காத்திருப்பவரா?

இன்றுடன் (08-11-2014) பதிவுகள் நிறைவடைகின்றன

கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | 0776697960



## Group Classes

English, கணிதம்;
விஞ்ஞானம் Gr-3-O/L
T.P - 0773314608


## மரண அறிவித்தல்



### பஞ்சாட்சரம் பத்மநாதன் (ரகு)

மட்டுவில் நாடு.பூநகரியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிட மாகவும் கொண்ட பஞ்சாட்சரம் பத்மநாதன் (ரகு) நேற்று (2.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - கலாமணி தம்பதியரின் அன்பு மகனும், இதயதாஸ், காலஞ்சென்ற அந்தோனி மரியா தம்பதியரின் மருமகனும் குமாரி விற்றறினின் அன்புக் கணவரும், மரியடினுசியா, நிர்மலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (டோகா), கல்யாணி, சுரேஸ்குமார், காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் பிரசாந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பீற்றர் சுரேஷ்குமார், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் டயஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.11.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.2 மணிக்கு காக்கைதீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: ப.சுரேஷ் (சகோதரன்.)

உயரப்புலம், ஆனைக்கோட்டை




விலை ரூபா 60 மட்டுமே!

## இதோ வெளிவந்துவிட்டது

நவம்பர் மாத

OLIARASI மாத சஞ்சிகை **ஒளிஅரசி** இல்லத்தரசிகளின் தோழி

இலவசம் O/L மாதிரி வினாத்தாள் கையேடு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

சாதனை எப்படி சாத்தியமானது?

சர்வதேச பொது அறிவுத் தொகுப்பு [செப்டெம்பர், ஓகஸ்ட்]

7 வகை திறன் போட்டிகள் பரிசு 150,000/=

தரம் 04 பிரபலங்களின் நுட்பமான வினா - விடை

யார் இந்த மலாலா?



தேசிய சாதனைபடைத்த வீராங்கனை ஜெகதீஸ்வரன் அனித்தாவின் முகப்பட்டைப் படத்துடன்...

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

விநியோகத் தொடர்புகளுக்கு: 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.